# சிந்துவெளி நாகரிகமும் தமிழர் நாகரிகமும்



எஸ். குருமூர்த்தி

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

36·5

# சிந்துவெளி நாகரிகமும் தமிழர் நாகரிகமும்

பேராசிரியர் முனைவர் சா. குருமூர்த்தி
தலைவர், பண்டைய வரலாறு, தொல்லியல் துறை (ஓய்வு)
சென்னைப் பல்கலைக்கழகம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் 613 010

நூல் சேர்க்கை
எண் 2138

ISBN: 978-81-7090-421-2

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு எண்.378

| | | |
|---|---|---|
| நூல் | : | சிந்துவெளி நாகரிகமும் தமிழர் நாகரிகமும் |
| ஆசிரியர் | : | முனைவர் சா. குருமூர்த்தி |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | வரலாறு |
| பதிப்பு | : | திருவள்ளுவராண்டு 2041, ஆனி முதற்பதிப்பு - சூன் 2010 |
| பக்கம் | : | 80+8 |
| தாள் | : | 70 ஜிஎஸ்எம் மேப்லித்தோ |
| அளவு | : | டெம்மி 1/8 |
| விலை | : | உரு. 50/- |
| படிகள் | : | 1200 |
| ஒளியச்சு | : | மோகன் கிராபிக்ஸ் |
| அச்சு | : | ஜப்பானிக்கா பிரிண்டிங் மீடியா 17 (7) ஸ்ரீபுரம், இரண்டாவது தெரு, இராயப்பேட்டை, சென்னை 600 014. |

**முனைவர் ம. இராசேந்திரன்**
**துணை வேந்தர்**

**தமிழ்ப் பல்கலைக்கழகம்**
**தஞ்சாவூர் – 613 010**

# அணிந்துரை

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கும் மேலான வழிகாட்டுதலுக்குமிணங்க 2010 சூன் 23-27ஆம் நாட்களில் கோவையில் நடைபெறும் வரலாற்றுச் சிறப்புமிக்க உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினைத் தமிழுலகம் மகிழ்ச்சியோடு வரவேற்றுப் போற்றுகிறது. உலகமெலாம் தமிழோசை பரவிடவும் தமிழர்தம் தொன்மையும் சிறப்பும் வெளிப்படவும் இம்மாநாடு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. இம்மாநாட்டு ஆய்வரங்குகளில் உள்நாட்டு, வெளிநாட்டு அறிஞர்கள் ஓராயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு ஐம்பத்தைந்து வகைப்பாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளைப் படிக்கவுள்ளனர்.

இம்மாபெரும் ஆய்வரங்க நிகழ்ச்சிகளை அமைத்து, ஒருங்கிணைத்து நடத்தும் பெரும் பொறுப்பினை **மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்கள் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு அளித்துள்ளார்கள். தமிழ்ப் பல்கலைக்கழகம் இப்பொறுப்பினை மனமுவந்து ஏற்று அல்லும் பகலும் அயராது பணியாற்றி வருகிறது. மாநாட்டிற்குப் பெருமை சேர்க்கும் ஆய்வரங்கங்களின் பணிப் பொறுப்பினைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு அளித்த **மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாநாட்டினையொட்டித் தமிழ்மொழி, இலக்கியம், இலக்கணம், வரலாறு, நாகரிகம், பண்பாடு, கலை, அறிவியல், மொழிபெயர்ப்பு எனப் பல்வேறு துறைகள் சார்ந்த

நூல்களைச் சிறப்பு வெளியீடுகளாகத் தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிடுகிறது. அவ்வகையில் இந்நூலும் ஒன்று. இதன் ஆக்கப்பணியில் முனைந்து பணியாற்றிய நூலாசிரியர் முனைவர் சா. குருமூர்த்தி, பதிவாளர் முனைவர் சா.பி. சரவணன், பதிப்புத்துறை இயக்குநர் திரு. வை.கண்ணபுரக் கண்ணன், அலுவலர்கள், பணியாளர்கள், கணினியச்சு செய்தளித்தோர், அட்டை வடிவாக்குநர், அச்சகத்தார் முதலிய அனைவருக்கும் என் வாழ்த்தும் நன்றியும் உரியதாகும்.

# முன்னுரை

சிந்துவெளி நாகரிகம் உலகில் தொன்மைமிக்க நாகரிகங்களுள் ஒன்றாகும். இந்நாகரிகத்தின் தொடக்கமே இந்திய வரலாற்றின் தொடக்கமாகும். இந்நாகரிகம் ஏறக்குறைய கி.மு. 3000ஆம் ஆண்டிலிருந்து கி.மு. 1800ஆம் ஆண்டு வரை வடமேற்கு இந்தியாவில் சிந்துநதிக்கரையின் மீது மலர்ந்து மணம் பரப்பி வந்தது. திடீரென்று மின்னல்போலத் தோன்றி மறைந்த நாகரிகம். சிந்துவெளிப் பகுதியின் நிலப்பரப்பு 1500 கி.மீ. நீளமும், 1100 கி.மீ. அகலமும் கொண்டதாய் விளங்கியது.

மேனாட்டவர்களான சர். சான் மார்ஷல், மக்கே, மார்ட்டிமர் வீலர் மற்றும் அமெரிக்க ஆய்வாளர்கள் ஆகியோரின் இடைவிடா முயற்சியினால் கடந்த நூற்றாண்டில் இப்பகுதியில் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வகழ்வாய்வுகள் சிந்துவெளி மக்களின் உயர்ந்த உன்னதமான நாகரிக வாழ்க்கையை உலகுக்கு எடுத்துக்காட்டின. அரண்மனைகள், கோட்டைகள், சாலைவசதிகள், கழிவுநீர்க் கால்வாய்கள், நீச்சல்குளம், நீராவிக் குளியல், நவீன நகர அமைப்பு, அடுக்குமாடி வீடுகள் என அதிநுட்பமான வசதிகளைக் கொண்டு வாழ்ந்து வந்தார்கள் சிந்துவெளி மக்கள்.

இந்நாகரிகத்தின் சிறப்பியல்புகளுள் மாக்கல்லால் உருவாக்கப்பட்ட சதுர, செவ்வக வடிவ முத்திரைகளும், எழுத்து முறையும் குறிப்பிடத்தக்கவை. இவை இரண்டும் சிந்துவெளி நாகரிகத்தின் இருகண்களாகும். சிந்துவெளி மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடிகள் என்றும் இவற்றைக் குறிப்பிடலாம்.

சிந்துவெளி முத்திரைகள் மீது காணப்படும் எழுத்துக்களைப் படித்துப் பொருளறிய மேனாட்டு அறிஞர்களும், நம் நாட்டு அறிஞர்களும் அயராது பாடுபட்டு வருகின்றனர். அவர்களது முயற்சியின் காரணமாகச் சிந்துவெளி எழுத்துக்கள் தமிழ் மொழிக்கு உரியவை என்பது தெரியவருகிறது.

இதன் பயனாகச் சிந்துவெளி மக்கள் திராவிடர்களாகிய தமிழர்கள் என்று கூற முடிகிறது.

சிந்துவெளிச் சின்னங்களும் ஏனைய தொல்பொருள்களும், எழுத்து வடிவங்களும் தமிழகத்தில் கிடைக்கத் தொடங்கியுள்ளன. இதன் பயனாகச் சிந்துவெளி மக்களும் ஆதித்தமிழர்களும் சமகாலத்தவர்கள் என்று அறிய முடிகின்றது.

சிந்துவெளி நாகரிகத்தைப்பற்றியும் அதற்குரிய உரிமையாளர்களைப் பற்றியும் விளக்கமாக எடுத்துரைக்க விரிவான ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும். இது போன்ற ஆய்வுகளுக்கு நமது தமிழக அரசும், தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களும் ஆக்கமும் ஊக்கமும் அயராது அளித்து வருகிறார்கள். தொல்லியல் அறிஞர்களைப் பெருமைப்படுத்திப் பாராட்டி விருதுகளையும் வழங்கிவருகிறார்கள். எனவே இந்நூற்றாண்டின் தலைசிறந்த ஆய்வுகளுள் சிந்துவெளி நாகரிகம் பற்றிய ஆய்வு முதன்மை இடம் வகிக்கும். அதன்பயனாகச் சிந்துவெளி நாகரிகம் தமிழர் நாகரிகமே என உலகுக்கு உணர்த்தப்படும்.

வரலாற்றுச் சிறப்புமிக்க உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு நடைபெறும் இவ்வேளையில் தமிழின் - தமிழரின் தொன்மைச் சிறப்புகள் மேலும் புலப்படுத்தப்பட ஏதுவாக இந்நூலை எழுதுவதற்கு என்னை ஊக்குவித்து வாய்ப்பளித்த மதிப்பிற்குரிய தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சா. குருமுர்த்தி

## உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தொடக்கம் | 1 |
| 2. | பூர்வீகம் | 5 |
| 3. | சிந்துவெளி நாகரிகத்தின் தோற்றம், மறைவு | 14 |
| 4. | தமிழ்நாட்டின் நாகரிகத் தொன்மை | 23 |
| 5. | சிந்துவெளி நாகரிகமும் திராவிடர் நாகரிகமும் | 33 |
| 6. | மக்களின் அன்றாட வாழ்க்கை முறை | 40 |
| 7. | பண்டைய இந்தியாவில் எழுத்துக்கலை | 47 |
| 8. | பண்டைய தமிழக மட்கலக் குறியீடுகளும் சிந்துவெளி எழுத்துக்களைப் படித்தலும் | 57 |
| 9. | பிற்சேர்கை மேற்கோள்நூல்கள் | 64 |
| 10. | நிழற்படங்கள் | 69 |
| 11. | வரைப்படங்கள் | 80 |

# 1. தொடக்கம்

1920ஆம் ஆண்டு சர். சான் மார்சல், சிந்துவெளிப் பகுதியில் அகழ்வாய்வுகளை மேற்கொண்டார். அவரைத் தொடர்ந்து என்னெஸ்ட் மக்கே என்பவரும் மற்றவர்களும் 1930ஆம் ஆண்டு அப்பகுதியில் மீண்டும் அகழ்வாய்வுகளை நிகழ்த்தினார்கள். அடுத்து 1960-ஆம் ஆண்டு இந்தியா, அமெரிக்கா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சார்ந்த தொல்லியல் ஆய்வாளர்கள் சிந்துவெளிப் பகுதியில் மீண்டும் அகழ்வாய்வுப் பணிகளைத் தொடர்ந்தார்கள். அவற்றின் மூலம் மிகத் தொன்மையான சிந்துவெளி நாகரிகத்தை உலகிற்கு எடுத்துக் காட்டினார்கள். சிந்து வெளிப் பகுதியின் நிலப்பரப்பு 1500 கி.மீ நீளமும், 1100 கி.மீ, அகலமும் கொண்டதாய் விளங்கியது. இந்த நாகரிகத்தின் காலம் கி.மு. 3500ஆம் ஆண்டு முதல் கி.மு. 1400 ஆண்டு வரை நீடித்து விளங்கிற்று.

அகழ்வாய்வுகளின் மூலம் அரப்பா, மொகஞ்சோதாரா, சான்கோதாரா போன்ற நகரங்களின் அமைப்பும், அங்கு வாழ்ந்த மக்களின் பண்பாட்டு இயல்புகளும் உலகிற்குத் தெரியவந்தது. சிந்துவெளி நாகரிகம் சிந்து நதிக்கரையில் தோன்றி மறைந்த ஒன்றாகும். உலகில் நதிக்கரைகள் மீதுதான் பண்டைய நாகரிகங்கள் தோன்றி வளர்ந்தன. எடுத்துக்காட்டுகள்: நைல் நதிக்கரையில் எகிப்திய நாகரிகம், டைகிரீஸ், யூப்பிரிட்டிஸ் நதிகளின் கரையில் சுமேரிய நாகரிகம், மஞ்சள் நதிக்கரையில் சீன நாகரிகம், சிந்து நதிக்கரையில் அரப்பா நாகரிகம், கங்கை நதிக்கரையில் ஆரிய நாகரிகம், தென் திசையில் கோதாவரி, கிருட்டிணா, காவிரி, வைகை, பாலாறு ஆகிய நதிக்கரைகள் மீது தோன்றிய திராவிட நாகரிகம் என்பனவாம். ஆதி மனிதன் ஏறக்குறைய இரண்டு இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு உலகில் தோன்றிப் படிப்படியாக நாகரிக வளர்ச்சி அடைந்த வரலாறு யாவரும் அறிந்ததே. குறிப்பாக ஆப்பிரிக்கா நாட்டிலும், இந்தியாவிலும்

ஆதிமனிதன் தோன்றி வாழ்ந்து வந்தமைக்கு அவன் விட்டுச் சென்ற கற்கருவிகளும், இயற்கை மலைக் குகைகளும் சான்றுகளைப் பகர்கின்றன. குறிப்பாகத் தமிழ்நாட்டில் கோற்றலை ஆற்றங்கரைப் பகுதிகளில் அமைந்துள்ள அத்திரம்பாக்கம், வடமதுரை, குடியம். எருமை வெட்டிப்பாளையம் ஆகிய ஊர்களில் கற்கால மனிதர்கள் வாழ்ந்தமைக்குத் தடயங்கள் கிடைத்திருக்கின்றன. அப்பகுதியை கற்கால மனிதனின் தொழிற்சாலைக் கூடமாக ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். எனவே, உலகின் தொன்மையான பகுதிகளுள் தமிழகமும் ஒன்றாகும். இதுபோன்று வடநாட்டில் சோகன் நதிக்கரையில் கற்கால மனிதன் வாழ்ந்தமைக்குத் தடயங்கள் கிடைத்துள்ளன. எனவே இந்தியாவின் தொன்மைக்கு அளவுகோலாகத் தமிழகமும், சிந்துவெளியும் திகழ்கின்றன என்றால் அது மிகையாகாது.

இந்தியா சுதந்திரம் அடைந்து 1947ஆம் ஆண்டிற்குப் பிறகு நூற்றுக்கணக்கான ஊர்களில் அகழ்வாய்வுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. குறிப்பாகத் தமிழகத்தில் 50க்கும் மேற்பட்ட ஊர்களில் அகழ்வாய்வுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் கற்காலம் முதல் இந்நாள் வரை தமிழக வரலாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

இந்திய வரலாறு பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்படுகிறது. அவையாவன:

1. பழைய கற்காலம்
2. இடைக் கற்காலம்
3. புதிய கற்காலம்
4. உலோககாலம்:
   - சிந்துவெளிக் காலம் (வெண்கலக்காலம்)
   - வேதகால ஆரியர் காலம் (செப்புக்காலம்)
   - இரும்புக்காலம்
5. வரலாற்றுக் காலம் (இரும்புக் காலம்)
6. பண்டைய வரலாற்றுக் காலம்
7. இடைக்காலம்
8. நவீன காலம் - 1947 வரை
9. அதிநவீனகாலம் - இன்றுவரை.

இந்திய வரலாறு தடங்கலின்றியும் தொடர்ச்சியாகவும் அமையவில்லை. மேலும் பலதரப்பட்ட மக்கள் கூட்டங்களும், அரசுகளும், பேரரசுகளும் ஆங்காங்கே ஆட்சி அமைத்து ஆண்டு வந்தமையை அறிய முடிகிறது.

மேற்கூறிய வரலாற்றுப் பகுதிகளுள் வெண்கலக்காலம் என்று கூறப்படுகின்ற ஒரு வரலாற்றுப் பகுதி இப்பொழுது நடைமுறையில் இல்லை. அதற்கு மாறாக அந்தக் காலகட்டத்தை சிந்துவெளிக் காலம் என்று அழைக்கிறோம். அங்கு வாழ்ந்த மக்களின் நாகரிகத்தைச் சிந்துவெளி நாகரிகம் அல்லது அரப்பா நாகரிகம் என்று அழைக்கிறார்கள். சிந்துவெளியில் அகழ்வாய்வுகள் நிகழ்த்தப்படுவதற்கு முன்பு இந்திய வரலாறு வேதகாலத்திலிருந்து தொடங்குவதாகக் கருதப்பட்டு வந்தது. ஆனால் சிந்துவெளி அகழ்வாய்வுகளுக்குப் பிறகு இந்திய வரலாறு அரப்பா, மொகஞ்சோதாராவில் தொடங்குவதாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதற்குப் பிறகு இந்திய வரலாற்றில் தொடர்ச்சியும் இல்லை, வளர்ச்சியும் இல்லை. காரணம் சிந்துவெளி நாகரிகம் ஒரு நகர்ப்புற நாகரிகம். ஆனால் அடுத்துவந்த வேதகால ஆரிய நாகரிகம் ஒரு கிராமிய நாகரிகம். எனவே இவ்விரு நாகரிகங்களும் ஒன்றுக்கொன்று முரண்பாடானவையாகும். இந்திய நாகரிகம் சிந்துவெளியில் தொடங்கினாலும் அது வளர்ச்சி அடையமுடியாத ஒரு நிலைப்பாட்டை எய்தியது. காரணம் சிந்துவெளி நாகரிகம் மின்னல் போலத் தோன்றிக் குறுகிய காலத்தில் மறையத் தொடங்கியது. ஆனால் அந்தக் குறுகிய காலத்தில் அதன் தொடக்கமே முற்றிய வளர்ச்சியடைந்த நாகரிகத்தைத் தழுவியதாக விளங்கிற்று. மேன்மேலும் வளர்ச்சிக்கான வரலாற்றில் ஆரிய வருகை இடர்ப்பாட்டைத் தோற்றுவித்தது. அதன் காரணமாக இந்திய நாகரிகம் வியக்கத்தக்க ஒரு பாதையில் செல்லவிருந்தது தடைப்பட்டது. ஏனென்றால் இந்திய வரலாற்றில் சிந்துவெளியைத் தொடர்ந்து ஆரிய நாகரிகம் தொடர வாய்ப்பில்லாமல் போயிற்று. காரணம், ஆரிய நாகரிகம் வளர்ச்சியும் முதிர்ச்சியும் அடையாத ஒரு நிலையில் இந்தியாவிற்குள் நுழைந்ததேயாகும். எனவேதான் இந்திய நாகரிகத்தின் வளர்ச்சி, அரசியல், அறிவியல் வளர்ச்சி நத்தை வேகத்தில் ஊர்ந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. மாறாக நகர்ப்புற நாகரிகமான சிந்துவெளி நாகரிகம் தடையின்றித் தொடர்ந்து வளர்ச்சி அடைந்து வந்திருந்தால் இந்தியாவின் முன்னேற்றப் பாதை திசைமாறி உலகின் வல்லரசுகளுக்கு

இணையாக உருவாகி இருக்கும். ஏனென்றால் சிந்துவெளி நாகரிகத்தில் மக்கள் நகர்ப்புறங்களில் அதிக எண்ணிக்கையில் வாழ்ந்து வந்தார்கள். அதற்கேற்ப அவர்களின் அன்றாட வாழ்க்கையில் பல்வேறு முன்னேற்றங்கள் உருவாகின. அவற்றுள் பாதாள சாக்கடைத் திட்டம், பொதுக் குளம், பொதுக் கழிவறை, செங்கல் வீடுகள், கோட்டைச் சுவர்கள், நீராவிக் குளியல், எழுத்து வடிவம், விலை உயர்ந்த அணிகலன்கள், ஆடைகள், பாத்திர வகைகள், கட்டட அமைப்புகள், நேர்கோட்டில் அமைக்கப்பட்ட தெருக்களைக் கொண்ட நகரத் திட்டம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. எனவேதான் சிந்துவெளி நாகரிகம் பண்டைய உலகில் திகழ்ந்த நாகரிகத் தொட்டில்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. சிந்துவெளிக் காலத்திற்குச் சமகாலத்தில் உலகின் மற்ற பகுதிகளில் குறிப்பாக எகிப்து, சுமேரியா, மெசப்படோமியா, சீனா ஆகிய நாடுகளில் நாகரிகத்தின் வளர்ச்சி அற்புதமாக முன்னேற்றங் கண்டது. அது மட்டுமன்றிச் சிந்துவெளி மக்கள் கடல்வழியாகவும், தரை வழியாகவும் அந்த நாடுகளுடன் வணிக, பண்பாட்டுத் தொடர்புகளை வைத்திருந்ததற்கான சான்றுகளை அகழ்வாய்வுகள் அள்ளித் தெளிக்கின்றன.

# 2. பூர்வீகம்

கற்காலத்திற்கும், ஆரிய வருகைக்கும் இடைப்பட்ட காலத்தை இந்திய வரலாற்றில் ஒரு இருண்ட காலமாக மேல்நாட்டு அறிஞர்கள் கருதிவந்த நிலையில் சிந்துவெளிப் பகுதியில் 1920, 1922, 1924-இல் நடத்தப்பட்ட அகழ்வாய்வுகள் இந்திய வரலாற்றின் தொடக்கமும் தொன்மையும் ஈடுஇணையற்றது என்பதை உலகத்திற்கு உணர்த்தின. சிந்துநதி பாயும் பெருவெளியில் நடத்தப்பட்ட அகழ்வாய்வுகள் இந்திய வரலாற்று வானில் குடியிருந்த இருளைப்போக்கி ஒரு நல்ல சிறப்பான நாகரிகத்தின் ஒளியைச் சிந்தின. இந்திய வரலாற்றின் இருண்ட காலத்தைப் பொற்காலம் என அறிவிக்க அடிகோலின. சிந்துவெளி நாகரிகம் இந்திய வரலாறு, பண்பாட்டுத் தொன்மைக்கு ஓர் அளவுகோல் என்று கூறலாம். சிந்துவிலும், பலுசிஸ்தானிலும் உள்ள பல ஊர்களில் இந்நாகரிகத்தைச் சார்ந்த சின்னங்கள் பல அகப்பட்டன. அந்த ஊர்களுள் குறிப்பிடத்தக்கவை: -

1. குவெட்டா
2. அம்ரி
3. நல்
4. குள்ளி-மெகி
5. சோபு வெளி

மேற்கண்ட இடங்களில் அகழ்வாய்வுகள் நடத்தப்பட்டன. அவற்றின் மூலம் மட்கலங்களும் ஏனைய தொல் பொருள்களும் கிடைத்தன. அவற்றை ஈண்டுக் காண்போம்:

***1. குவெட்டா:***

குவெட்டாவின் தென்பகுதியில் இருபது இடங்களில் மணமேடுகள் அகழ்வாய்வு செய்யப்பட்டன. அங்கு வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்ட மட்கலங்கள் கிடைத்தன.

அவையாவும் இரானில் கிடைத்த மட்கலங்களோடு ஒப்புமையுடையனவாகக் காணப்பட்டன (கி.மு. 3000).

**2,3. *அம்ரி-நல்:***

சிந்துவெளியில் மொகஞ்சோதாராவின் தெற்கே அம்ரி என்னும் இடத்திலும், பலுசிஸ்தானத்தில் நல் என்னும் இடத்திலும் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இங்கு ஏராளமான தொல் பொருள்களும் மங்கிய மஞ்சள் வண்ண மட்கலங்களும் அகப்பட்டன. நல் என்னும் இடத்தில் ஒரு பெரிய இடுகாடு தோண்டப்பட்டது. அங்கு எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டன. இறந்தவர்களை எரிக்காமல் அவர்களுடைய எலும்புக் கூடுகளைப் புதைத்திருக் கிறார்கள். ஆய்வாளர்களின் கருத்துப்படி நல் நாகரிகம் அரப்பாவைவிட, தொன்மையானதாகும். அம்ரியில் சிறுவர் விளையாடும் களிமண் வண்டிகள், மட்கலங்கள், பொம்மைகள், வளையல் துண்டுகள் போன்றவையும் தேர்கள் போன்ற விளையாட்டுக் கருவிகளும், காளைமாட்டு உருவங்களும் கிடைத்துள்ளன. இவையனைத்தும் மொகஞ்சோதாரா பண்பாட்டுச் சின்னங்களோடு பெரிதும் ஒத்திருக்கின்றன என்று சர் மார்ட்டிமர் வீலர் கூறியுள்ளார்.

**4. *குள்ளி-மெகி:***

பலுசிஸ்தான் மலைகளின் அடிவாரத்தில் குள்ளியும், வடகிழக்குத் திசையில் மெகி என்னும் இடமும் பழமை வாய்ந்தவை. இங்கு காரை பூசப்பெற்ற கற்களாலும், காய்ந்த செங்கற்களாலும் கட்டப்பட்ட வீடுகள் நிலத்தடியில் அகப்பட்டன. இங்கு கிடைத்த மட்கலக்கலையின் மீது அரப்பா மட்கலக் கலையின் நிழலும், சாயலும் படிந்திருப்பதைக் காணமுடிகிறது. அவை கருப்பு-சிவப்பு மட்கலங்களாகும். மெகியில் கற்குடங்கள் பல கிடைத்துள்ளன. இவை போன்ற குடங்கள் மொகஞ்சோதாராவிலும் கிடைத்துள்ளன. இக் கற்குடங்களில் நறுமணப் பொருள்களை அடைத்து மெசபடோமியா போன்ற நாடுகளுக்குக் கடல்வழியாக எடுத்துச் சென்று வாணிகம் நடைபெற்றிருக்க வேண்டும் என சர். மார்ட்டிமர் வீலர் கருத்து தெரிவித்துள்ளார்.

**5. *சோபு வெளி:***

பலுசிஸ்தானின் வடக்கில் சோபு ஆறு சிந்துவெளி நோக்கிப் பாயும் பகுதியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட மட்கலங்களும், விலங்குகளின் உருவங்களும் சிந்துவெளிச் சின்னங்களோடு பெரும் ஒப்புமையுடையதாக உள்ளன.

மேற்கண்ட அனைத்து நாகரிகங்களும் வடமேற்கு இந்தியாவில் பரந்து விரிந்து கிடந்த ஆற்றுவெளியில் தொல்பழங்கால நாகரிகம் ஒன்று நிலவி இருந்தமைக்கான சான்றுகளை அள்ளித் தருகின்றன. இந்நாகரிகம் முதலில் கிராமிய நாகரிகமாகத் தோன்றி வளர்ந்து பின்னர் சிறந்த நிலையினை அடைந்துள்ளது. அதன் பயனாகப் பெரிய நகரங்கள் தோன்றலாயின. அதன் காரணமாகச் சிந்துவெளியில் ஒரு மாபெரும் நாகரிகமான சிந்துவெளி நாகரிகம் அரும்பி வளர்ந்தது. பல நூற்றாண்டுகள் தனித்துத் தழைத்து ஓங்கி வளர்ந்தது. அயல்நாட்டுத் தொன்மை நாகரிகங்களின் தென்றல் வீசியதன் பயனாகச் சிந்துவெளி நாகரிகம் மேன்மேலும் வளர்ச்சியுற்றது. சிந்துவெளி நகரங்கள் பொறியியல் வல்லுநர்களின் திறமையை அடிப்படையாகக் கொண்டு நல்வாழ்விற்குரிய நலமுடன் உருவாக்கப்பட்டுள்ளன. சிந்துவெளி நகரங்கள் மெசப்படோமியாவின் தலைநகரமான *ஊரின்* நகர அமைப்பிலிருந்து பெரிதும் வேறுபட்டு, மாறுபட்டு அமைக்கப் பெற்றிருக்கிறது என்பது கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

சிந்துவெளியில் லாகூருக்கும், முல்தானுக்கும் இடையே அமைந்துள்ளது அரப்பா. சிந்து மாநிலத்தில் லர்க்கானா மாவட்டத்தில் அமைந்துள்ளது மொகஞ்சோதாரோ. இந்த இடங்களில் தோன்றி வளர்ந்த நாகரிகத்தைச் *சிந்துவெளி நாகரிகம்* என்று கூறுவது மரபு. இன்றைய சிந்து மாநிலம் அக்காலத்தில் நீர்வளமும், நிலவளமும் கொண்ட மாநிலமாகத் திகழ்ந்தது. சிந்து நதியுடன் *பெருமிகிரன்* என்ற ஆறும் பல சிறு ஆறுகளும் பாய்ந்தோடும் (ஆற்று)வழியாக அமைந்ததன் காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுக் கரையோரங்களில் அமைந்த நகரங்கள் பலமுறை அழிந்தன.

***மொகஞ்சோதாரோ:***

மொகஞ்சோதாரோ என்ற சொல்லிற்கு *மறைந்தோர் மண்மேடு* என்று அந்த மாவட்ட மொழியில் அழைக்கிறார்கள்.

மொகஞ்சோதாரோவின் நகர அமைப்புத் திட்டத்தையும், வசதிகளையும் காணும்பொழுது பண்டைய இந்தியர்கள் நகர அமைப்பில் பெற்றிருந்த தேர்ச்சியினைக் கண்டு உலகம் வியக்கிறது.

அந்த நகர அமைப்பில் பல பகுதிகள் உள்ளன. எல்லாப் பகுதிகளும் ஒரே அடிப்படையில் ஒழுங்காகப் பிரிக்கப்பட்டுள்ளன. தெருக்கள் கிழக்கு மேற்காகவும், தெற்கு வடக்காகவும் அமைந்துள்ளன. பல குறுந்தெருக்கள் இவற்றில் வந்து கலக்கின்றன. தெருக்கள் 3 மீட்டர் முதல் 12 மீட்டர் வரை அகலமுடையனவாக உள்ளன. (படம் 1) தெருக்கள் கூடும் இடங்கள் நேர்கோணங்களில் அமைந்துள்ளன. எனவே நகரத்தின் அமைப்பு சதுரங்களாகவோ அல்லது நீண்ட சதுரங்களாகவோ பிரிக்கப்பட்டுள்ளன. குறுந்தெருக்களில் வீடுகள் அமைந்துள்ளன. ஒவ்வொரு வீட்டிற்கும் கிணறு, குளிக்கும் அறையும் உண்டு. ஒவ்வொரு தெருவிலும் ஒரு பொதுக் கிணறு உருவாக்கப்பட்டிருக்கிறது. வீடுகள் தெருவின் எல்லையைக் கவராது மனையின் எல்லைக்குள்ளேயே கட்டப்பட்டு உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. சுமேரியாவில் கூட மனையின் எல்லையை மீறித் தெருக்களில் வீடுகள் கட்டியிருக்கிறார்கள். இதனை நோக்கும் பொழுது சிந்துவெளி நகர அமைப்புத் திட்டம் ஒழுங்காக வரம்பு மீறாமல் பாதுகாக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு தெருவின் இரு பக்கங்களிலும் கால்வாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவை அனைத்தும் செங்கற்களால் கட்டப்பட்டவையாகும். தெருவில் ஓடும் கால்வாய்கள் சதுர வடிவமுள்ள செங்கற்களால் மூடப்பட்டுள்ளன. வீட்டுச் சாக்கடைகள் தெருக் கால்வாயுடன் இணைக்கப்பட்டுள்ளன. எனவே கழிவுநீரை அகற்றக் கால்வாய்கள் பயன்பட்டன. நகருக்கு வெளியே கழிவுநீர் எடுத்துச் செல்லப்பட்டிருகிறது. இன்றைய பெருநகர அமைப்பில் உள்ள பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு ஒப்பானது சிந்துவெளிக் கால்வாய்க் கட்டமைப்பு என்று கூறலாம்.

ஒவ்வொரு வீட்டின் கொல்லைப்புறத்திலும் குப்பை கொட்டுவதற்குக் குழிகள் வெட்டித் தாழிகளைப் புதைத்து குப்பைகளை அகற்றினார்கள். சிந்துவெளி நாகரிகத்தின் மிகச் சிறந்த பண்புகளில் ஒன்றாக அந்நகரங்களின் விரிவான வடிகால் வசதி கருதப்படுகிறது. இத்திட்டத்தைக் கண்டு வியந்த சர்

மார்ட்டிமர் வீலர் இந்த வடிகால் வசதி கிரேக்க, ரோம நாட்டு நகரங்களிலும் கூடக் காணமுடியாதது என்று பாராட்டியுள்ளார்.

ஒரு தெருவில் வீடுகளும் மற்ற கட்டடங்களும் வரிசையாகத் தொடர்ந்து கட்டப்பட்டுள்ளன. அவை பருத்த சுவர்களால் கட்டப்பட்டவையாகும். அவை 7 மீட்டர் முதல் 10 மீட்டர் உயரம் கொண்டதாக உள்ளன. வீடுகளைக் கட்டுவதற்கு நன்றாக அறுக்கப்பட்டடுச் சமன் செய்யப்பட்ட செங்கற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. மற்றபடி கிணறு வெட்டுவதற்கும், கழிவுநீர் வடிகால் அமைப்பதற்கும், பெரும் மதில்களைக் கட்டுவதற்கும் பல்வேறு அளவுகளில் செய்யப்பட்ட செங்கற்கள் பயன்படுத்தப்பட்டன. மேற்கண்ட பெரிய செங்கற்கள் 30 அங்குல நீளமும், 12 அங்குல அகலமும், 8 அங்குல பருமனும் உடையனவாக இருக்கின்றன. முழுச் செங்கற்கள், அரைச் செங்கற்கள், ஆப்பு வடிவச் செங்கற்கள் ஆகிய பலவகை உருவ அமைப்புகளில் செய்யப்பட்டுள்ளன. உலகப் புகழ்பெற்ற உரோமானியப் பேரரசை நிறுவிய பேரரசர் அகஸ்தசு காலத்தில்தான் செங்கற்களைப் பயன்படுத்தும் முறையை மேலை நாடுகள் அறிந்து கொண்டன.

வீடுகள் 1 முதல் 3 அடுக்குகளைக் கொண்ட மாடி வீடுகளாகத் திகழ்கின்றன. வீட்டின் நுழைவாயில் உயரம் 1.5 மீட்டர் முதல் 1.75 மீட்டராகும். இதனால் அங்கு வாழ்ந்த மக்கள் குள்ளமாக இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. வீடுகளின் நடுவில் முற்றமும், சுவர்களில் பல பலகணிகளும் அமைக்கப்பட்டுள்ளன. வீடுகள் அல்லாது அரண்மனைகளும் கட்டப்பட்டிருந்தன. அகழ்வாய்வுகளில் அழகிய நீச்சல்குளம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. (படம் 2) அதன் பரப்பளவு 13 மீட்டர் நீளமும் 8 மீட்டர் அகலமும் 3 மீட்டர் ஆழமும் உடையதாக உள்ளது. குளத்தைச் சுற்றி அறைகள் கட்டப்பட்டுள்ளன. குளத்தை நீச்சல் குளமாகக் கருத வாய்ப்புள்ளது. குளத்திற்கு அருகில் கிணறுகளும், குளிக்கும் அறைகளும் அமைக்கப்பட்டுள்ளன. தற்காலத்திய நீச்சல் குளங்களைப் போன்ற வசதியும், அழகும் உடையதாக அக்குளம் காணப்படுகிறது.

தானியங்களைச் சேமித்து வைக்கும் பெரிய களஞ்சியம் ஒன்று கண்டெடுக்கப்பட்டது. 50 மீட்டர் நீளமும், 17 மீட்டர்

அகலமும் கொண்ட அக்களஞ்சியம் சரக்குகளை இறக்குவதற்கும், ஏற்றிச் செல்வதற்கும் ஏற்றபடி வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

***லோதல்:***

குஜராத்தில் அகமதாபாத்தில் லோதல் என்ற இடத்தில் நிகழ்த்தப்பட்ட அகழ்வாராயச்சியில் ஒரு சிறிய நகரம் கண்டெடுக்கப்பட்டது. இங்கு நடத்தப்பட்ட அகழ்வாய்வுகளில் கிடைத்த தொல்பொருள் சின்னங்களும், கட்டட இடிபாடுகளும், துறைமுகமும் (படம் 3) அரப்பா நாகரிகத்தைச் சுட்டுகின்றன. லோதல் நாகரிகம் (கி.மு. 2800-1500) அரப்பா காலத்திற்குப் பிற்பட்டதாகும். அரப்பா நகரம் அழிவுற்ற பிறகு அங்கிருந்து தப்பிய மக்கள் தென் திசையை நோக்கிச் சென்று வாழ முற்பட்டிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. அரப்பா மக்களுடைய அழிவிற்குப் புதிதாக இந்தியாவிற்குள் நுழைந்த மக்களே காரணமாவர் என்றும், அவர்கள் ஆரியர்களாக இருக்கக்கூடும் என்றும் கருதப்படுகிறது. அந்த அழிவிற்குப் பிறகு சிந்துவெளிமக்கள் அப்பகுதியை விட்டுப் புறப்பட்டுத் தென் மேற்குத் திசை வழியாக இன்றைய அகமதாபாத் மாவட்டப் பகுதிகளில் தங்கி மீண்டும் தங்கள் வாழ்க்கையைத் துவக்கினர் போலும்!

***துறைமுகம்:***

லோதல் பகுதியில் செங்கற்களால் கட்டப்பட்ட பெரிய கப்பல் துறைமுகம் அகழ்ந்தெடுக்கப்பட்டது. இங்கு கிடைத்த தொல்பொருள்களுள் வண்ணம் தீட்டப்பட்ட மட்கலயங்கள், முத்திரைகள், அரப்பா எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், குறியீடுகளும், குறி எழுத்துக்களும் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் முதலியன குறிப்பிடத்தக்கன. 1958-59ஆம் ஆண்டு இங்கு திரு. எஸ்.ஆர். ராவ் அவர்கள் அகழ்வாராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டதுடன் சிந்துவெளி எழுத்துக்களைப் படிக்கப் பயனுறும் ஆய்வுகளையும் மேற்கொண்டார். சிந்துவெளி முத்திரைகளில் காணப்படும் சின்னங்கள் ஆரிய சாயலை தாங்கியுள்ளன என்றும், அரப்பா மக்கள் வேதகால ஆரிய நாகரிகத்தைப் பிரதிபலிக்கும் மக்கள் என்றும் அவர் கூறியுள்ளார். சிந்துவெளி எழுத்துக்களைப் படித்து அவை காட்டும் சமய சடங்குகள், சமயச் சின்னங்கள் ஆகியவை ஆரியர்களைச் சாரும் என்றும் குறிப்பிட்டுள்ளார். இக்கூற்று 80 ஆண்டுகளுக்கு முன்பு வேண்டுமானால் ஒப்புக்

கொள்ளப்பட்டிருக்கலாம். ஆயினும் கடந்த 50 ஆண்டுகளில் அரப்பா எழுத்துக்களைப் படிக்க முயன்றவர்கள் எண்ணிக்கையில் அடங்கார். சிந்துவெளி மக்கள் ஆதி திராவிட பண்பாட்டை உடையவர்கள் என்றும், அவர்களுடைய எழுத்துக்கள் திராவிடப் மொழிகளை, குறிப்பாகத் தமிழ் மொழியைக் கொண்டவை என்றும் சர் சான் மார்சல் காலம் முதல் (1924) இன்று வரை சிந்துவெளி நாகரிகம் திராவிட நாகரிகம் என்று கூறப்பட்டு வருகிறது - அறிவிக்கப்பட்டு வருகிறது. ஆழ்ந்த அறிவியல் ஆய்வு காரணமாக மேனாட்டு அறிஞர்களும், இந்நாட்டு அறிஞர்களும் இக்கருத்தினை ஏற்கும் வகையில் அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறார்கள். அவற்றைப் பின்னர் விரிவாகக் காண்போம்.

***அரப்பா:***

மொகஞ்சோதாரோவைவிட அரப்பா பெரும் பரப்பை உடையதாகும். நீண்ட நெடுங்காலம் நிலைத்து நின்ற நகரமாகும். வேதங்களில் இந்நகரத்தில் *விரிசிளர்* என்ற பூர்வீக மக்கள் வாழ்ந்ததாகக் கூறப்பட்டுள்ளது. அவர்கள் ஆரியக் கடவுள் இந்திரனுடைய பகைவர்கள் என்று கூறப்பட்டுள்ளது. மேற்கண்ட விரிசிளர் சிந்துவெளியில் வாழ்ந்த பூர்வீக மக்களான திராவிடர்களைக் குறிக்கும் என்று கருத வாய்ப்புள்ளது. இப்பகுதியில் நடந்த போரில் அரப்பா மக்கள் தோற்றகடிக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. எனினும் இக்கருத்தை ஏற்றுக்கொள்ளச் சான்றுகள் கிடைக்கவில்லை.

அரப்பா நகர அமைப்பும், வீடுகளும், தெருக்களும் மொகஞ்சோதாரோவைப் போன்று வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன. இந்நகரின் வெளியே பருத்த சுவர்களைக் கொண்ட ஒரு கோட்டை மதில் கட்டப்பட்டுள்ளது. சிந்துநதி வெள்ளப்பெருக்கைத் தடுத்து நிறுத்த அவை பயன்பட்டிருக்கலாம். ஒரு தொழிலாளர் குடியிருப்பும் இதில் கண்டெடுக்கப்பட்டது. ஒவ்வொரு வீட்டிலும் இரண்டு அறைகளும், தள வரிசையும், இடம் பெற்றுள்ளன. நெற்களஞ்சியங்களும், உலைகளும், தொழில் மேடைகளும் அரப்பாவில் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இங்கு கண்டெடுக்கப்பட்ட களஞ்சியம் 57 மீட்டர் உயரமும், 45 மீட்டர் அகலமும், 14 மீட்டர் உயரமும் உடையது. இரண்டு பகுதிகளாக இடைவெளி விட்டுக் கட்டப்பட்டுள்ளது.

## 3.சிந்துவெளி நாகரிகத்தின் தோற்றம், மறைவு

**சிந்துவெளி நாகரிகத்தைச் சுற்றிப் பல புரியாத புதிர்கள் உள்ளன. அவையாவன:**

(அ) தோற்றம், தொன்மை, வளர்ச்சி, மறைவு
(ஆ) இந்நாகரிகத்திற்குரிய மக்கள் யாவர்? ஆரியர்களா? திராவிடர்களா?
(இ) சிந்துவெளி எழுத்துக்களைப் படிப்பதற்குரிய திறவுகோல்
(ஈ) சிந்துவெளி நாகரிகத்திற்கும் திராவிட, குறிப்பாகத் தமிழக நாகரிகத்திற்கும் இடையே உள்ள ஒற்றுமைகள்

***தோற்றம்:***

சிந்துவெளி நாகரிகத்தின் தொடக்கம் கி.மு. 3500-ஆம் ஆண்டு என்று கணிக்கப்பட்டுள்ளது. ஆயினும் அந்தப் பகுதியில் நிகழ்த்தப்பட்ட அகழ்வாய்வுகள் முற்றுப் பெறாத நிலையில் நிறுத்தப்பட்ட காரணத்தால் தொடக்கத்தைச் சரியாகக் கணிக்க முடியவில்லை. அப்பகுதியில் மக்கள் வாழ்ந்த நகரங்களில் அவற்றின் இடிபாடுகளைத் தன்னகத்தே கொண்டிருந்த மண்மேடுகள் 30 மீட்டர் உயரம் கொண்டிருந்தன. எனவே அவற்றை அகழ்வு செய்யும் பொழுது அகழ்வுக் குழிகளின் ஆழம் 20 மீட்டரைக் கடந்தது. அதன் காரணமாக நிலத்தடியில் நீர் ஊற்றுகள் தோன்றி இயற்கை மண்ணைத் (Natural Soil) தொட முடியவில்லை. எனவே அந்நாகரிகத்தின் தொடக்கத்தை அறுதியிட்டுக் கூறமுடியவில்லை.

***தொன்மை:***

சிந்துவெளி நாகரிகத்தின் தொன்மை அதன் பூர்வீகம் அல்லது சொந்த நிலப்பகுதியை அடையாளம் காண ஆய்வுகள் நடந்து கொண்டு இருக்கின்றன. வடமேற்கு இந்தியாவில் பலுசிஸ்தான் பகுதியில் சிந்துவெளி நாகரிகத்தின் அடிப்படைப் பண்பாட்டுக் கூறுகள் அகப்பட்டுள்ளன என்பதை முன்னரே

12/38

கண்டோம். ஆதலால் அப்பகுதிகளிலிருந்து அம்மக்கள் அல்லது அவர்களுடைய நாகரிகம் சிந்துவெளிப் பகுதியினுள் நுழைந்து தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கலாம். அடுத்து, சிந்துவெளி மக்கள் அப்பகுதியின் பூர்வீக மக்களாக இருந்திருக்க வேண்டும் என்றும் கூறலாம்.

***வளர்ச்சி:***

இந்நாகரிகம் திடீரென்று தோன்றி, ஒரு முற்றிய - சீராக வளர்ச்சியடைந்த நாகரிகமாகக் கருதப்படுகிறது. அதன் வளர்ச்சியில் பல நிலைகளைக் காண இயலாது. அதன் காரணமாக அதன் வளர்ச்சியைப் பரவலாக இந்தியா முழுவதும் காண முடியவில்லை. இந்தியாவின் மற்ற பகுதிகளுக்குக் குறிப்பாகத் தென் திசையில் அதன் பண்பாட்டுக் கூறுகளை அடையாளம் காண முடியாத ஒரு நிலைப்பாடு இருந்துவந்தது. அதாவது கோதாவரி ஆற்றங்கரைக்குத் தென் திசையில் இந்நாகரிகத்தின் அடிச்சுவடுகள் அகப்படவில்லை. எனினும் அண்மைக்கால ஆய்வுகளில் திராவிட நாடாகிய தென்னகத்திலும் குறிப்பாகத் தமிழகத்திலும் சிந்துவெளிப் பண்பாட்டுக் கூறுகள் ஆங்காங்கே கிடைத்த வண்ணம் உள்ளன. எடுத்துக்காட்டுகளாகச் சிந்துவெளி எழுத்துக்களை போன்ற மட்கல எழுத்துக் குறியீடுகள், புதிய கற்காலக் கல்லுளிமீது பொறிக்கப்பட்ட சிந்துவெளி எழுத்துக்கள் (கண்டியூர்) போன்றவற்றைக் குறிப்பிடலாம் (படம் 4). மேலும் பல்வேறு சான்றுகள் உள்ளன. அவற்றைப் பின்னர்க் காண்போம்.

***மறைவு:***

சிந்துவெளி நாகரிகம் திடீரென்று நலிந்து வீழ்ச்சியுற்றதாகக் கருதப்படுகிறது. அப்படியானால் சிந்துவெளி மக்களுடைய நிலைப்பாடு எதுவாய் இருந்திருக்க வேண்டும் என்பது கீழே விளக்கப்பட்டுள்ளது. சிந்துவெளி நாகரிகத்தின் வீழ்ச்சிக்கு ஐந்து முக்கியக் காரணங்கள் கூறப்படுகின்றன. அவையாவன:

(அ) சிந்து நதியில் வெள்ளப்பெருக்கெடுத்துப் பேரழிவை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

(ஆ) ஒரு பெரிய காட்டுத்தீ பரவி மக்களை மடியச்செய்திருக்க வேண்டும்.

(இ) அந்நியர் படையெடுப்பு
(ஈ) திடீர் நிலநடுக்கம்
(உ) தொற்று நோய் பரவல்.

***வெள்ளப்பெருக்கெடுப்பு:***

சிந்து நதிக்கரையில் பேரழிவை உண்டாக்கும் மிகப்பெரிய வெள்ளப்பெருக்கு உருவாகி இருக்கலாம் என்பதற்கு அகழ்வாய்வுக் குழிகளில் சான்றுகள் கிடைத்துள்ளன. அம்மக்கள் வாழ்ந்து விட்டுச் சென்ற பகுதிகளின் மண் வரிசைகள் அல்லது அடுக்குகளுள் ஒருசில மணல் அடுக்குகளாகக் காட்சி அளிக்கின்றன. இந்த மணல் அடுக்குகள் வெள்ளப்பெருக்கைக் குறிக்கின்றன. இந்த மணல் அடுக்குகளுள் தொல் பொருள்கள் எவையும் கிடைக்கவில்லை. காரணம் அந்தக் காலகட்டத்தில் மக்கள் குடியிருப்புகள் அழிக்கப்பட்டிருக்கின்றன என்பதேயாகும்.

***பெருந் தீ:***

ஒரு பெருந் தீ சிந்துவெளிப் பகுதியில் உருவாகிப் பரவிப் பரவலாக அழிவை ஏற்படுத்தியிருக்க வேண்டும் என்பதற்கான சான்றுகள் மீண்டும் அகழ்வாய்வுக் குழிகளினுள் கரித்துண்டுகளாகவும், கரியுடன் கலந்த மண் அடுக்குகளாகவும் காணப்பட்டன. கரி கலந்த மண் அடுக்குகள் பெருந் தீ விபத்தைக் குறிக்க வல்லன. அச்சமயத்தில் அங்கு மக்கள் வாழ இயலாது. எனவே கரி கலந்த மண் அடுக்குகளில் மக்களுடைய உடைமைகள் எதுவும் காணப்படவில்லை. எனவே தீ விபத்து அந்நாகரிக மறைவிற்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

***அந்நியர் படையெடுப்பு:***

அந்நியர் படையெடுப்பு சிந்துவெளி நாகரிகத்தையும், மக்களின் வாழ்க்கையையும் முடிவுக்குக் கொண்டுவரக் காரணமாக இருந்திருக்க வாய்ப்பு உண்டு எனக் கருதப்படுகிறது. அகழ்வாராய்ச்சிகளின் போதும், கள ஆராய்ச்சிகளின் போதும் ஆங்காங்கே வீழ்ந்து கிடந்த மனித எலும்புக் கூடுகளும், மண்டை ஓடுகளும் கண்டெடுக்கப்பட்டன. இத்தகைய எலும்புக் கூடுகள் பொதுமக்கள் குளிக்கும் இடங்களிலும், தெரு முனைகளிலும் அப்படியே விட்டுச் செல்லப்பட்டிருக்கின்றன. அந்நியர்கள் அப்பகுதிகளில் திடீரென்று படையெடுத்து மக்களைத் தாக்கியிருக்க வேண்டும் என்பதையே இந்தக்காட்சி

எடுத்துக்காட்டுகிறது. மேலும், மண்டை ஓடுகளை ஆய்வு செய்ததில் ஆங்காங்கே வெட்டுக் காயங்களின் வடுக்கள் காணப்பட்டன. இந்த அந்நியப் படையெடுப்புக்குக் காரணமானவர்கள் ஆரியர்களாக இருக்க வேண்டும் என்பதே அறிஞர்களின் கருத்து.

இயற்கைச் சீற்றம், வெள்ளமாகவும், புயலாகவும், தீயாகவும், நிலநடுக்கமாகவும், கொடிய தொற்று நோயாகவும் உருவெடுத்துச் சிந்துவெளி நாகரிக அழிவிற்கு அடிகோலியிருக்கலாம் என்பதே சாலப் பொருந்தும். அந்நியர் படையெடுப்போ அல்லது அந்நியமக்கள் கூட்டங்களோ சிந்துவெளி நகரங்களுள் நுழைந்து மக்களைத் தாக்கி அவர்களுடைய கோட்டைகளை உடைத்து நாசப்படுத்தியிருக்கலாம் என்ற கருத்து ஏற்புடையதாக இல்லை. இருப்பினும் ஆரியர்கள் இயற்றிய வேதங்களில் (ரிக் வேதம்) அவர்கள் கருப்பு நிறமுடைய தாசு என்ற இனத்தவரை வெற்றி கொண்டதாகக் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு வெற்றி கொள்ளப்பட்ட மக்கள் திராவிடர்களே ஆவர் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். ஏனென்றால் ஆரியப் படையெடுப்புக்கு முன்பு அங்கு வாழ்ந்த திராவிடர்கள் அப்பகுதியின் பூர்வீகக் குடிமக்களாவர். ஆரிய நாகரிகம் திராவிட நாகரிகத்திற்கு முற்றிலும் வேறுபட்ட மாறுபட்ட ஒன்றாகும் என்பது யாவரும் அறிந்ததே. திராவிடர்களை தாசுகள் (Dasus) எனவும், மிலேச்சர்கள் எனவும் வேதங்கள் சுட்டிக்காட்டுகின்றன. குறிப்பாக, *சதபத பிரமாணம்* என்ற வடமொழி இலக்கியம் திராவிடர்களை அரக்கர்கள் என்றும் ஆரியர்களுக்குப் புரியாத ஒரு மொழியைப் பேசுபவர்கள் என்றும் குறிப்பிடுகிறது.

சுமேரியர்களுடைய ஆப்புவடிவ எழுத்துக்கள் மிலேச்சர்களுக்குத் தொடர்புடைய கருப்பு நாட்டிலிருந்து (Black Foriegn Country of Ne-luh-ha) பாய்மரக்கப்பல்கள் அக்காடு (Akkad) வளைகுடாவிற்கு வந்து சேர்ந்ததாகக் குறிப்பிடுகின்றன. அந்தப் படகுகள் வாயிலாகச் சிந்து வெளியிலிருந்து கொண்டுவரப்பட்ட பொருட்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன. அவையாவன:

1. ஆரஞ்சு நிற - பளபளக்கும் கற்களாலான கார்னிலியன் மணிகள் (Cornelcan beads)
2. தேக்குமரத் துண்டுகள்

3. தங்கம்
4. வெள்ளி
5. லாப்பிசு லசூலி (Lapis Lausuli) (பளபளக்கும் கற்கள்) (Semi precious stones).
6. முத்துக்கள்
7. (மயில்) இறகுகள்
8. நாய்கள்
9. பூனைகள்

மேற்கண்ட பொருட்களை எடுத்துவரக் கப்பல்களையும் பயன்படுத்தியதாகச் சுமேரியன் களிமண் ஆப்புஎழுத்துக்கள் இயம்புகின்றன.

திராவிடர்களுடைய நூற்றுக்கணக்கான கோட்டைகள் உடைத்து அழிக்கப்பட்டதாக வேதங்களில் கூறப்பட்டுள்ளது. அவர்களுடைய கடவுள்களான இந்திரன், அக்னி, போன்றவர்களுடைய துணையுடன் அக்கோட்டைகள், நகரங்கள் அழிக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. இந்த ஆரியர் படையெடுப்பும் திராவிடர்களின் உடைமைகளை அழித்த செயலும் ஏறக்குறைய சிந்துவெளி நாகரிகத்தின் முடிவுகாலத்திலிருந்து மூன்று நூற்றாண்டுக்குப் பிறகு நிகழ்ந்திருக்க வேண்டும். அதாவது சிந்துவெளி நாகரிகம் இயற்கைச் சீற்றங்களால் மறைந்து போனபிறகு ஆரியர்களின் வருகை ஏற்பட்டு இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

***சிந்துவெளி மக்கள் ஆரியர்களா, திராவிடர்களா?***

சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட முத்திரைகளுள், சுடுமண் உருவங்கள், கட்டட இடிபாடுகள், இலக்கிய மொழி ஆய்வுகள், தமிழகத்து அகழ்வாய்வுகளில் கிடைக்கப்பெற்ற முதுமக்கள் தாழிகள், மட்கலயக் குறியீடுகள், குறி எழுத்துகள் முதலிய பல்வேறு தொல்பொருள்கள் இம்மக்கள் திராவிடர்கள் என்பதற்கு சான்று பகிர்கின்றன.

***முத்திரைகள்:***

சிந்துவெளியில் 2000க்கும் மேற்பட்ட முத்திரைகள் கிடைத்துள்ளன. அவை மாக்கல், சுண்ணாம்புக்கல், செப்பு, களிமண், தந்தம் போன்றவற்றால் சதுரமாகவோ செவ்வகமாகவோ உருவாக்கப்பட்டுள்ளன. இம்முத்திரைகளின் மீது பல்வேறு

உருவங்களும், எழுத்து வடிவங்களும் குறிகளும் காணப்படுகின்றன. ஒரு முத்திரையின் நடுவில் ஒரு உருவமும் அதன் இரு பக்கங்களிலும் இரு புலிகள் பாய்வது போன்று காணப்படுகிறன. புறநானூறில் குறிப்பிடப்பட்டுள்ள புலிகடிமால் என்ற வேளிர் அரசரையே இவ்வுருவம் காட்டுவதாகக் கருத வாய்ப்புள்ளது.

புலிகடிமால் வேளிர் மரபைச் சார்ந்தவர் (படம் 6). அவருடைய முன்னோர்கள் துவாரகையைச் சார்ந்தவர்கள் என்று கருதப்படுகிறது. புலிகடிமால் என்ற பெயருக்குரிய காரணத்தைக் கபிலர் விளக்கவில்லை. எனினும் புலிகடிமாலுடைய முன்னோர்களுள் ஒரு அரசர் துவாரகாபதியில் தவம் செய்து கொண்டிருந்த ஒரு முனிவரைத் தாக்க வந்த புலிகளிடமிருந்து உயிரைக் காப்பாற்றியதாக நம்பப்படுகிறது. அந்த வீரச் செயலை புரிந்த தம் முன்னோரின் நினைவாக வேளிர் அரசர்க்குப் புலிகடிமால் என்ற பெயர் சூட்டப்பட்டிருக்கலாம். இந்த நிகழ்ச்சிதான் புறநானூறில் இடம் பெற்றுள்ளது. எனவே வேளிர் மரபினர் வட இந்தியாவில் குறிப்பாக மகாராட்டிரப் பகுதியில் ஆண்டிருக்க வாய்ப்பு உள்ளது.

அரப்பா மக்கள் வாழ்ந்த காலத்தில் ஐந்து திராவிட நாடுகள் நிலவியதாகவும், அவற்றுள் மகாராட்டிரம் ஒன்றெனவும் கருதப்படுகிறது.

வேளிர் மரபினர் தமிழகத்தில் கி.மு. 1000 ஆண்டிற்கு முன்னர் ஆட்சி செய்ததாகக் கூறப்படுகிறது (மு, இராகவய்யங்கார்).

அடுத்து, ஒரு முத்திரையில் புலியின் மீது அமர்ந்த ஓர் உருவம் காணப்படுகிறது. இவ்வுருவத்தைத் தமிழ்க் கடவுள் சக்தியைக் குறிக்கும் துர்க்கா என எடுத்துக் கொள்ளலாம். சிம்மத்திற்குப் பதில் புலி உருவம் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்குக் காரணம் சிந்துவெளி திராவிடர்களுக்குச் சிம்மத்தைவிடப் புலியே நன்கு அறிந்த ஒரு விலங்காகும். ஆனால் ஆரியர்களுக்கு நன்கு அறிமுகமாகிய விலங்கு சிம்மமாகும். அவர்களுடைய வேதங்களில் சிம்மமே அடிக்கடி குறிப்பிடப்பட்டுள்ளது. சங்ககாலத் தமிழர்களுக்கு புலி நன்கு அறிமுகமான - விருப்பப்பட்ட ஒரு விலங்காகும். எடுத்துக்காட்டு: சங்ககால வேளிர் அரசர்களில்

ஒருவர் புலிகடிமால் என்ற பெயரைக் கொண்டிருக்கிறார். மேலும் சோழர்கள் புலிக்கொடியைக் கொண்டவர்கள் ஆவர். புலிப்பல்லால் செய்யப்பட்ட அணிகலன்களை அணிந்து கொண்டார்கள். எனவே மேற்கூறிய புலியைத் தாங்கிய முத்திரைகள் திராவிடப் பண்பாட்டை எடுத்துக்காட்டும் வண்ணமாக அமைந்துள்ளன.

சங்க இலக்கியங்களுள் புலி, சிம்மத்தைவிட அதிக எண்ணிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதையும் இங்கு நினைவுகூரல் வேண்டும். முத்திரைகளில் மனித உருவங்கள், விலங்குகள் குறிப்பாகக் குறுங்கொம்புடைய எருது, காட்டெருமை, யானை, புலி, கரடி, கல்யானை, வெள்ளாடு, குரங்கு, மான், முயல் போன்றவை செதுக்கப்பட்டுள்ளன. அம்மக்கள் அணிந்த தாயத்துகளிலும் (Amulets) அவை செதுக்கப்பட்டுள்ளன. விலங்குகளுள் உலகில் காணப்படும் பொதுவான விலங்குகள் முதலிடம் பெறுகின்றன. உலகில் இல்லாத விலங்குகளை அதாவது கற்பனை விலங்குகள், கலப்பு விலங்குகள் என அழைக்கலாம். விலங்குகளுள் புலி, நீண்ட கொம்புகளையும், பருத்த திமிலையுமுடைய எருது, ஆகியவற்றை வழிபாடு செய்திருக்க வாய்ப்புண்டு. அதனை விலங்கு வணக்கம் என்பர்.

இன்னுமொரு முத்திரையில் மூன்று முகங்களுடனும், எருமைக் கொம்புத் தலையுடனும் காணப்படும் உருவத்தைச் சங்க காலப் பாண்டிய மரபைச் சார்ந்த ஒரு சிற்றரசரைக் குறிப்பதாகக் கருத வாய்ப்புள்ளது (படம் 7). அவ்வரசனை ***எருமையூரான்*** என்று புறநானூறு சுட்டிக்காட்டுகிறது. அக்காலத்தில் எருமைநாடு என்று ஒரு பகுதி இருந்ததாகவும், செந்தமிழ் நாட்டின் ஒரு பகுதியாக அது விளங்கியதாகவும் புறநானூறு இயம்புகிறது. சிலப்பதிகாரத்தில்கூட எருமைநாடு குறிப்பிடப்பட்டுள்ளது. எருமை என்றால் கருமை என்று பொருள். ஆகையால், எருமை நாட்டுக்கு உரியவர்கள் கருப்பு நிறம் கொண்ட திராவிடர்களாவர். எருமை நாட்டை, சிந்துவெளிப் பகுதியில் அமைந்திருந்த ஒரு சிற்றூராக எடுத்துக் கொள்ளலாம்.

மேலும் எருமை என்ற அரசர் குடநாடு என்ற பகுதிக்கு உரிமையாளர் என அகநானூற்றில் கூறப்பட்டுள்ளது. எனவே குடநாடு, எருமை நாடு ஆகியவற்றைச் சிந்துவெளிப்பகுதியைச் சார்ந்த தமிழர்கள் ஆண்டுவந்த பகுதிகளாகக் கருதலாம். எனவே புறநானூறும் அகநானூறும் சிந்துவெளிக்கும் தமிழகத்திற்கும்

இடையே நிலவிய அரசியல், பண்பாட்டுத் தொடர்புகளை எடுத்துக்காட்டும் கண்ணாடிகளாக விளங்குகின்றன.

சங்ககால அரசருள் புள்ளி என்பவர் வேங்கடத்தை ஆண்டு வந்ததாக புறநானூறும் அகநானூறும் குறிப்புகளைக் கொடுக்கின்றன. அந்த அரசர் கள்வர் மரபைச் சார்ந்தவர். அவர் கள்வர் கோமான் என்று குறிப்பிடப்படுகிறார். கள்வர் என்றால் கருப்பு நிறமுடையவர் என்று பொருள். களப்பரர் என்ற சொல்லுக்குக் கள்வர் என்றும் பொருள் கொள்வர். அவ்வாறாகக் கள்வர் என்பதற்கு யானை என்றும் பொருள் காணலாம். எனவே புள்ளி அரசரை யானைப் படையின் தலைவர் என்று கூற வாய்ப்புள்ளது. யானைக் கூட்டங்கள் நிறைந்த சிந்துவெளிப்பகுதியை ஆண்ட அரசருள் புள்ளியும் ஒருவன் என்று கருதலாம்.

மேலும் அவன் ஆட்சி செய்த வேங்கடம் என்பதைத் தமிழ் நாட்டின் வடதிசையில் உள்ள இமயம் எனக் கருதலாம். அங்கு வாழ்ந்த மக்களை வடுகர் என்று அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை ஆகிய சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. சிந்துவெளி மக்களைத்தான் வடகர் (வடுகர்) எனக் குறிப்பிடுவதாக எடுத்துக் கொள்ளலாம். வேங்கடம் என்பது இமயமலையையும் அதனைச் சார்ந்த சிந்துவெளிப் பகுதியையும் குறிக்கிறது எனக் கருதுவதில் தவறில்லை. எனவே சங்க இலக்கியங்கள் காட்டும் சிந்து வெளியில் வாழ்ந்தவர்களும், ஆட்சி செய்தவர்களும் தமிழ்க் குடியைச் சார்ந்தவர்கள்தான் என்று கூற வாய்ப்புள்ளது.

சங்கத் தமிழர்களின் நிலப்பரப்பைப் புறநானூறு பின்வருமாறு அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறது.

வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்
குணாஅது கரைபொரு தொடுகடல் குணக்கும்
குடா அது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்

சங்க காலத் தமிழகத்திற்கும் சிந்துவெளிப் பகுதிக்கும் இடையே கருத்துப் பரிமாற்றமும் அரசியல் பண்பாட்டுத் தொடர்புகளும் நெருக்கமாக நிலவிய காட்சியைச் சங்க இலக்கியங்கள் வாயிலாகக் காணமுடிகிறது.

மாக்கல், சுண்ணாம்புக்கல், சலவைக்கல் ஆகியவற்றின் மீது முத்திரைகள் செதுக்கப்பட்டிருப்பதால் மிருதுவான கற்களில் சிற்பம், சித்திரம் ஆகியவற்றை வரைவதில் சிந்துவெளிச் சிற்பிகள் திறமை பெற்றிருந்தார்கள் எனக் கூற முடிகிறது. மேலும் வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தில் இந்தியக் கலை உருவாகி வளர்ச்சியுற்ற கதையை இந்த முத்திரைகள் எடுத்து இயம்புகின்றன. இந்தியக் கலை, தத்துவம் எந்த அடிப்படையில் தோன்றி வளர்ச்சியுற்றது என்பதை விளக்கப் பயன்படுகின்றன. முத்திரைகளில் காணப்படும் கலைப் பண்பே பிற்கால இந்தியக் கலையின் கரு முதலாக - ஊற்றாக இருந்து வருகிறது என்பது உண்மை. தேர்ச்சிபெற்ற கலைஞர்களின் கைத்திறனால் அவை உயிர்த் துடிப்பு கொண்டனவாக விளங்குகின்றன.

பொதுவாக இந்திய மக்கள் கிரேக்கர்களுடன் கொண்ட தொடர்பின் காரணமாகத்தான் (அசோகர் காலம்) கல் சிற்பங்கள், சிலைகள் செய்யக் கற்றனர் என்று மேனாட்டவர்கள் கருதி வந்தார்கள். ஆனால் கிரேக்கர்கள் சிற்பக் கலையைப் பற்றிக் கனவு காணக் கூட வாய்ப்பில்லாத தொல்பழங்காலத்திலேயே இந்தியர்கள் சிற்பக் கலையிலும், படிமக்கலையிலும் தேர்ச்சி பெற்று விளங்கினார்கள் என்பதை அரப்பா முத்திரைகள் எடுத்துக் காட்டுகின்றன. சர். சான் மார்சல் இந்தியச் சிற்பக்கலை இந்தியாவிலேயே தோன்றி வளர்ந்தது, இந்தியர்களுக்கே உரியது: சிந்துவெளிச் சிற்பக்கலையில் அயல்நாட்டுத் தாக்கத்தைச் சிறிதளவும் காண்பதரிது என்று கூறியுள்ளார்.

# 4. தமிழ்நாட்டின் நாகரிகத் தொன்மை

***தமிழகப் புதிய கற்காலமும் சிந்துவெளி நாகரிகமும்:***

தென்னாட்டின் புதிய கற்கால வரலாறு தொடர்ச்சியாக இல்லாத காரணத்தால் அதன் முக்கியத்துவம் பற்றி இன்றும் முழுமையாக உணரமுடியவில்லை. முதன் முதலில் 1949-ஆம் ஆண்டு சர். மார்ட்டிமர் வீலர் என்னும் அறிஞர் மைசூரில் உள்ள பிரம்மகிரியில் நடத்திய அகழ்வாராய்ச்சிகள் மூலம் தென்னாட்டின் புதிய கற்கால நாகரிகம் பற்றி இவ்வுலகிற்கு அறிவித்தார். அதற்குப்பின் மாஸ்கி என்னும் இடத்திலும் மற்றும் கர்நாடகத்தில் உள்ள வேறு சில இடங்களிலும் நடத்திய அகழ்வாராய்ச்சியின் பயனாகத் தாபர் என்னும் அறிஞரும் புதியகற்காலச் சிறப்பியல்புகளை வெளிப்படுத்தினார். இத்தகைய ஆராய்ச்சிகளின் பயனாகக் கர்நாடகத்திற்கு இந்தியாவின் கற்கால வரைபடத்தில் (Proto historic map) ஒரு முக்கிய இடம் அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கர்நாடகத்தின் புதிய கற்கால நாகரிகத்திற்கும், மத்திய இந்தியாவின் புதிய கற்கால நாகரிகத்திற்கும் உள்ள தொடர்பை நாம் அறியமுடிந்தது.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரை வேலூர் மாவட்டம் பய்யம்பள்ளி மற்றும் அப்புக்கல்லு ஆகிய இரு இடங்களில் நிகழ்த்தப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் தென்னாட்டின் புதிய கற்கால நாகரிகத்தைப் பற்றிப் பல வியக்கத்தக்க உண்மைகளை வெளிப்படுத்தின. பய்யம்பள்ளியில் அகழ்வாய்வுகளை நடத்திய திரு S.R. ராவ் என்பவரின் கூற்றுப்படி அந்த இடத்தில் ஒரு கலப்படமற்ற தூய்மையான புதிய கற்கால நாகரிகம் நிலவியது என்றும், அது மத்திய இந்தியாவின் செப்புக்காலத்தில் மக்கள் பயன்படுத்திய வண்ணம் பூசப்பட்ட மட்கலக்கலை மற்றும் மெல்லிய செதிள் கற் கருவிகள் ஆகியவற்றால் எந்த வகையிலும் பாதிக்கப்படவில்லை என்றும் தெரியவந்தது.

தென்னாட்டின் புதிய கற்கால நாகரிகத்தின் தனித்தன்மை வாய்ந்த கருவிகளுள் பளபளப்பான கோடரிகள் (Polished celts) குறிப்பிடத்தக்கவையாகும். செப்பு, வெண்கலம் போன்ற உலோகங்கள் ஒரு சில இடங்களில் மட்டுமே வழக்கில் இருந்தன. ஆயினும் மத்திய மற்றும் வட இந்தியாவில், கலப்படமற்ற தூய புதிய கற்கால நாகரிகம் காணப்படவில்லை. மாறாகச் செப்புகால நாகரிகம் காணப்படுகிறது. அதாவது கல், உலோகம் இரண்டையுமே பரவலாக உபயோகப்படுத்தினர். குறிப்பாகச் செவ்வண்ணம் பூசப்பட்ட மட்பாண்டங்களும் செப்பினால் செய்த பொருட்களும், கருவிகளும் அவர்களிடையே அதிக அளவில் பயன்பட்டன. தென்னிந்தியர்களிடையே காணப்பட்ட மெருகேற்றப்பட்ட பளபளப்பான கோடரிகள் மற்றும் சாம்பல் வண்ண மட்கலயங்கள் ஆகியவற்றை அவர்கள் பயன்படுத்தவில்லை. ஆயினும் மகாராட்டிரத்தில் உள்ள நெவேசா (Nevasa) இடத்தில்தான், மத்திய இந்தியாவின் செப்புக்கால நாகரிகம், தென்னிந்திய புதிய கற்கால நாகரிகம் சந்தித்துக் கொண்டன. நெவேசா தவிர மேற்கு வங்கத்தில் பாண்டுராஜர்திப்பி, பீகாரில் சிராண்ந்து, மத்தியபிரதேசத்தில் இரான் போன்ற இடங்களில் சாம்பல்நிற மட்கலங்கள் பயன்படுத்தப்பட்டன என்பது உண்மை.

அதேபோன்று தமிழகப் புதிய கற்கால நாகரிகம் மூலமாகத்தான் மத்திய இந்தியாவின் செப்புக்கால நாகரிகம் உருவாகி வளர்ந்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. ஆனால் இந்நாகரிகம் கர்நாடகத்தில் தோன்றிய சிறிது காலத்திற்குப் பிறகே பய்யம்பள்ளியில் பரவியிருக்க வாய்ப்புள்ளது.

மேற்கண்ட கூற்றின்படி, தமிழ்நாட்டு மக்கள் தம் கருவிகளைப் படைப்பதில் தமக்கென்று ஒரு தனிப்பாணியை வளர்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்று அறிகிறோம். பிறகு அவ்வழக்கம் நாளடைவில் வடதிசை மாநிலங்களிலும் பரவியிருக்க வேண்டும். ஏனெனில் காஷ்மீரிலுள்ள பர்சாகோம் (Burzahom) மற்றும் ஸ்ரீநகர் போன்ற இடங்களில் அகழ்வாய்வுகள் மேற்கொண்டபொழுது மெருகேற்றப்பட்ட கோடரிகள் மற்றும் சாம்பல் வண்ண மட்கலயங்கள் கிடைக்கப் பெற்றன. ஆகவே, காஷ்மீரின் புதிய கற்கால நாகரிகமும் தென்னிந்திய நாகரிகமும் ஒரே வகையைச் சார்ந்ததென்று அறிகிறோம். இந்த இரு மாநிலங்களுக்குமிடையே மற்ற இடங்களைத் தவிர்த்து வடக்கிலும்

தெற்கிலுமாக இவ்விரு இடங்களில் மட்டுமே ஒரே மாதிரியான நாகரிகம் காணப்படுவதன் காரணம் நமக்குத் தெளிவாக விளங்கவில்லை. இருப்பினும் புதிய கற்காலத் தென்னாட்டு மக்கள், வடநாட்டில் பல இடங்களில் சென்று குடியேறியிருக்க வேண்டும் என்று கருத வாய்ப்பிருக்கிறது. அவர்கள் பிற்காலத்தில் மத்திய இந்தியாவில் வாழ்ந்த செப்புக்கால மக்களுடன் கொண்ட தொடர்பின் காரணமாகச் சமபக்க, செதிற் கற் கருவிகள் (Parallel sided blades) செவ்வண்ண மட்கலங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தக் கற்றிருக்க வேண்டும். அதே காலத்தில் இவ்வழக்கம் கோதாவரி நதிக்கரையின் தெற்கே செல்லச் செல்ல மிக மெதுவாகவும், சிறிய அளவிலும் பரவியிருக்கிறது. தொடக்கத்தில் தமிழகத்து வடமேற்கு மாவட்டங்களான வட ஆற்காடு, ஈரோடு, சேலம், தருமபுரி, போன்ற இடங்களில், கலப்படமற்ற புதிய கற்கால நாகரிகம் பெருமளவில் வழக்கிலிருந்து, பிறகு மத்திய இந்தியச் செப்புக்கால நாகரிகம் சிறிது சிறிதாகத் தென் கர்நாடக மாநிலங்கள் வழியாக தமிழகத்திற்குள் பரவியிருக்க வேண்டும். மத்திய இந்தியாவின் செப்புக்கால மக்களுடன் கொண்ட் தொடர்பு காரணமாகக் கர்நாடகத்தின் வடமாநிலங்கள்தான் மிகவும் பாதிக்கப்பட்ட இடங்களாகக் கருதப்படுகின்றன. இத்தகைய பாதிப்பு தமிழ் நாட்டில் அதிகம் காணப்படவில்லை. தமிழகத்தில் எந்த இடத்திலும் செப்புக்கால வண்ணம் பூசப்பட்ட மட்கலங்கள் கிடைக்கப் பெறாத காரணத்தால் அந்நாகரிகம் தமிழ்நாட்டில் ஊடுருவியிருக்க வாய்ப்பில்லை என்று கருதப்படுகிறது.

பய்யம்பள்ளியின் புதியகற்கால நாகரிகம் கி.மு. 2000த்தைச் சார்ந்ததென்று அறிகிறோம். ஆகவே கி.மு. 2000ஆம் ஆண்டில் தமிழகத்தில் பெரும்பான்மையான இடங்களில் மக்கள் வாழத் தொடங்கவில்லை என்று கருதப்பட்டது. ஏனெனில் தமிழகத்தில் மற்ற மாவட்டங்களில் அகழ்வாய்வுகள் நடத்தியபொழுது அங்கு கிடைக்கப்பெற்ற தொல்பொருட்களை ஆய்கையில் இரும்பு காலத்திலிருந்துதான் மக்கள் அவ்விடங்களில் வாழத் தொடங்கியிருக்க வேண்டும் என்று கூறப்பட்டது. இவ்விடங்களில் நடத்திய அகழ்வாய்வுகளின் மூலம் கண்டெடுக்கப்பட்ட கருப்பு-சிவப்பு நிறம் பூசப்பட்ட பானைகள், மற்றும் கண்ணாடி மணிகள் ஆகியவை இருப்புக் காலத்தைச் சேர்ந்தவை. ஆகவே முதன் முதலில் இவ்விடங்களில் வாழ்க்கையைத் தொடங்கிய மக்கள் இரும்புக் காலத்தைச்

சேர்ந்தவர்களாகத்தான் இருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. அதன் காரணமாக ஏறக்குறைய கி.மு. 500ஆம் ஆண்டிலிருந்துதான் தமிழகத்தின் இரும்புக்காலம் தொடங்கியிருக்க வேண்டும் என்று கருதப்பட்டு வந்தது. எனவே கி.மு.2000ஆம் ஆண்டிலிருந்து கி.மு. 500ஆம் ஆண்டுவரை பெரும்பாலான தமிழக நிலப்பகுதிகளில் மக்கள் வாழ்ந்திருக்க முடியாது என்று கருதப்பட்டு வந்தது. ஆனால் இக்கருத்தை அப்படியே நம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது.

எனவே மேற்கண்ட கருத்தை வேறு கோணத்திலிருந்து ஆராய வேண்டும். மேற்கண்ட பகுதிகளில் கி.மு. 2000ஆம் ஆண்டில் மக்கள் தம் வாழ்க்கையைத் தொடங்கவில்லை என்றும் புதிய கற்காலத்தில் தமிழ்நாட்டின் மக்கள் தொகை மிகவும் குறைவாக இருந்திருக்க வேண்டும் என்றும் தமிழகத்தில் எல்லா இடங்களிலும் புதியகற்கால நாகரிகம் பரவியிருக்க வாய்ப்பில்லை என்றும் ஆய்வாளர்கள் கருதினாலும் அதே சமயம் நாம் கூர்ந்து கவனிக்கப்பட வேண்டிய கருத்து என்னவெனில் இவ்விடங்களில் பழைய, புதிய கற்கால அல்லது வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட காலத்து மக்களைப் பற்றி அறிந்து கொள்ளும் நோக்குடன் அகழ்வாய்வுகள் நடத்தப்படவில்லை என்பதேயாகும். எடுத்துக்காட்டாகத் தென்னார்க்காட்டில் உள்ள விருத்தாசலத்திற்கருகில் புதிய கற்கால மனிதர்களைப் பற்றிய பல அரிய தடயங்கள் அண்மைக் காலத்தில் கிடைத்துள்ளன. கீழ்வாளை என்னும் இடத்தில் காணப்பட்ட கற்பாறை ஓவியங்களும் திண்டிவனத்திற்கு அருகே பாறைகளில் கற்கால மனிதனால் செதுக்கப்பட்ட கற்சிற்பங்களும், நமக்கு உணர்த்துவது யாதெனில், மிகவும் தொன்மையான காலத்திலிருந்தே அல்லது இரும்புக் காலத்திற்கு முன்பிருந்தே இவ்விடங்களில் மக்கள் வாழ்ந்திருக்க வேண்டும் என்பதுதான். இருப்பினும் அகழ்வாய்வுகளின்பொழுது இங்கு கிடைத்த மிகத் தொன்மையான பொருட்கள் யாவும் இரும்புக்காலத்தைச் சேர்ந்தவைதான் என்ற ஒரே காரணத்தால் அகழ்வாராய்ச்சியாளர்கள் மேற்கூறிய கருத்தை ஒப்புக் கொள்ள மறுப்பார்கள். இவர்கள் கூற்றுப்படி அதாவது கி.மு. 5ஆம் நூற்றாண்டிற்கு முன் தமிழ்நாட்டில் பெரும்பான்மையான இடங்களில் மக்கள் வாழ்க்கை தொடங்கவில்லை என்று கொள்ள வேண்டும். ஆனால் இரண்டு காரணங்களினால் இக்கருத்தை நம்மால் ஏற்றுக் கொள்ள இயலாது. முதலாவதாக, கொற்கை, திருக்காம்புலியூர் போன்ற இடங்களில் கிடைத்த பானை வகைகள் மற்றும் கார்பன்

14 தேதிகள் (Carbon 14 dates) போன்றவற்றைக் கொண்டு பார்க்கும் பொழுது (அட்டவணை) தமிழ்நாட்டின் இரும்புக்காலம் கி.மு. 1500 ஆம் ஆண்டிலிருந்தே தொடங்கியிருக்க வேண்டும் என்று தெரிகிறது. அடுத்து கோயமுத்தூர் சவக்குழிகளில் கிடைத்த பானைகள், மற்றும் பெருங்கற்காலத்தைச் சார்ந்த சவக்குழிகளுள் கிடைத்த வண்ணம் தீட்டிய பானைகள் ஆகியவற்றை ஆய்கையில் அவை ஈரானில் கிடைத்த (கி.மு. 2000 ஆண்டுகளின் பிற்பகுதியைச் சார்ந்த) வண்ணப் பானைகளைப் போன்றே காட்சியளிக்கின்றன.

இரண்டாவதாக, திருநெல்வேலியைச் சார்ந்த இடங்களில் காணப்பட்ட நாகரிகம் செப்புக் காலத்திற்கும் இரும்புக்காலத்திற்கும் இடைப்பட்ட கால கட்டத்தைச் சார்ந்ததைப் போல் தோன்றுகிறது. ஏனெனில் கொற்கை, ஆதிச்சநல்லூர் போன்ற இடங்களில் காணப்படும், கையினால் செய்த கிண்டி போன்ற மட்கலங்கள், சிவப்பு-கருப்பு வண்ணம் கொண்டவையாகும். இவை செப்பு காலத்தைச் சார்ந்த, சிந்துவெளி மற்றும் மத்திய இந்தியாவில் காணப்படும் பானைகளைப் போலவே தோற்றமளிக்கின்றன. ஆதிச்சநல்லூரில் கிடைத்த எண்ணற்ற வெண்கலக் கருவிகள் அங்கு இரும்புக் காலத்திற்கு முன்பே ஒரு சிறந்த பழைமையான நாகரிகம் வழக்கில் இருந்திருக்க வேண்டும் என்று நம்மை எண்ண வைக்கின்றன. அண்மைக்காலத்தில் நிகழ்த்தப்பட்ட அகழ்வாய்வுகளில் கி.மு. 1500 ஆண்டுக்குட்பட்ட தொல் பொருட்கள் கிடைத்துள்ளன. வடநாட்டில் அகார் என்னுமிடத்தில் கிடைத்த கி.மு. 1800 ஆம் ஆண்டைச் சார்ந்த கருப்பு மற்றும் சிவப்பு வண்ணப் பானைகளின் மேல் வெள்ளை வண்ணம் தீட்டப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மதுரை, ஆதிச்சநல்லூர், கொற்கை மற்றும் உறையூர் ஆகிய இடங்களில் இதுபோன்ற பானை வகைகள் கிடைத்துள்ளன. இதே போன்ற பானைகளை வட இந்தியாவில் மக்கள் செப்பு மற்றும் வெண்கலக் காலத்தில் பயன்படுத்தினர் என்றும், அவர்கள் உபயோகித்த அதே வகைப் பானைகளை இரும்புக் காலத்தில் தென்னிந்திய மாநிலம் முழுவதிலும் பெருவாரியாக மக்கள் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள் என்றும் அறிகிறோம்.

மேற்கூறிய கருத்துக்களிலிருந்து நமக்கு விளங்குவது யாதெனில் தமிழ் நாட்டில் குறைந்தபட்சம் கீழ்க்காவேரிச் சமவெளி மற்றும் சானூர், ஆதிச்சநல்லூர், கொற்கை, கொடுமணல் போன்ற

இடங்களில் மட்டுமாவது இரும்பு காலத்திற்கு முன்பே ஒரு சிறந்த தொன்மையான நாகரிகம் வழக்கில் இருந்திருக்க வேண்டும் என்பதுதான். சானூர் சவக்குழிகளில் கிடைத்த குழுக்குறியீடுகள், குறி எழுத்துக்கள், ஆகியவற்றைத் தாங்கிய பானை ஓடுகள் நம்மை அவ்வாறு எண்ண வைக்கின்றன. எனவே, தமிழகத்தின் இரும்புக்கால நாகரிகமும் மத்திய இந்தியாவின் கி.மு. 2000ஆம் ஆண்டுகளின் இறுதிக்கட்டத்தில் நிலவிய செப்புக்கால நாகரிகமும் (அரப்பா நாகரிகம்) சமகாலத்தைச் சார்ந்தவை எனக் கருதலாம்.

தமிழகத்தில் இரும்புக் காலம் எப்பொழுது தொடங்கியிருக்க முடியும் என்ற கேள்விக்கு நன்கு, ஆராய்ந்து விடை கண்டுபிடிக்க வேண்டும். அதற்குப் பிறகே புதிய கற்காலத்திற்கும், இரும்புக் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்நத தமிழர்களின் பண்பாட்டு இயல்புகளை அறிந்து கொள்ள ஆய்வுகள் நடத்தப்படவேண்டும்.

***தமிழக இரும்புக் காலத்தின் தனித்தன்மையும் அதன் வளர்ச்சியும்:***

மேற்கூறிய கருத்துகளிலிருந்து தமிழ்நாட்டின் புதிய கற்காலம் முதல் இரும்புக் காலத் தொடக்கம் வரையிலான இடைப்பட்ட காலத்தில் ஒரு இடைவெளி இருப்பதையும், அதைப் பற்றிய உண்மைகள் இன்னும் நமக்குச் சரியாகப் புலனாகாமல் இருப்பதையும் அறிகிறோம். ஆகவே இந்த இடைவெளியை அகற்றினால் சிந்துவெளி நாகரிகமும் தமிழர் நாகரிகம் சம காலத்தவையாகிவிடும். அதனை ஈண்டுக் காண்போம்.

(1) தமிழ்நாட்டின் சில இடங்களில் குறிப்பாக வடமாவட்டங்களிலும் தென் மாவட்டங்களிலும் இரும்புக் காலத்திற்கு முன்பே ஒரு நாகரிகம் வழக்கில் இருந்திருக்க வேண்டும் என்று நினைவில் கொள்ள வேண்டும்.

(2) இரண்டாவதாக, தமிழக இரும்புக் காலத்தின் தொடக்கம் இன்னும் முன்னதாகவே அதாவது கி.மு. 2000ஆம் ஆண்டுகளிலேயே தொடங்கியிருக்க வேண்டும் என்று கொள்ள வேண்டும். உறையூர், கொற்கை, கொடுமணல், ஆலங்குளம், கரூர், திருக்காம்புலியூர் போன்ற இடங்களில் கிடைத்துள்ள குழுக்குறியீடுகள் கொண்ட பானைகள்

நிச்சயமாக இரும்புக்காலத்திற்கு முந்தைய காலத்தைச் சேர்ந்ததாக இருக்க வேண்டுமென்பதேயே உணர்த்துகின்றன. இதே போன்று சானூர் சவக்குழியில் கிடைத்த பானைக் குறியீடுகளும் நிச்சயமாக இரும்புக்காலத்துக்கு முந்தைய காலத்தைச் சார்ந்தவையாக இருக்க வேண்டும். (கடைசிப் பகுதியில் விளக்கப்பட்டுள்ளது).

தமிழ்நாட்டின் இரும்புக்காலத் தொன்மை குறித்துக் கீழ்க்கண்ட உண்மைகளை நினைவில் கொள்வது மிகவும் பயனளிக்கும். ஏனெனில் தென்னகத்தின் பண்டைய நாகரிகத்தில் ஒரு மகத்தான பக்தியாக இரும்புக்காலம் விளங்குகிறது. இக்காலத்தின் தனித்தன்மைகளாவன:

(1) பெருமளவில் மக்கள் இரும்பைப் பயன்படுத்தினர்.

(2) நெல் பயிரிடும் முறை மற்றும் குளப்பாசனம் ஆகியவற்றின் தொடக்கம் ஏற்பட்டது.

(3) இறந்தவர்களை அடக்கம் செய்வதற்குப் பலவகையான சவக்குழிகளையும் மட்கலங்களையும் பயன்படுத்தினர். இவற்றைப் பெருங்கற்காலச் சவக்குழிகள் (Megalithic burials) என்று அழைப்பர்.

(4) பெருமளவில் கருப்பு-சிவப்பு மட்கல வகைகளைப் பயன்படுத்தினர்.

(5) ஒருவகை எழுத்து முறையைக் கண்டுபிடித்தனர்.

(6) நாணய முறையும் வழக்கில் இருந்தது.

(7) எகிப்து, கிரேக்கம், உரோமாபுரி, சீனா மற்றும் ஈரான் போன்ற அயல் நாடுகளுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர்.

மேற்கூறிய சிறப்பியல்புகள் மக்களின் அன்றாட வாழ்வில் பெரும் மாற்றங்களை உருவாக்கி மக்கள் எல்லா வசதிகளுடனும்

மனநிறைவுடன் வாழ வழி செய்து கொடுத்தன. இத்தகு ஒரு உயரிய நாகரிகம் தென்னிந்தியா முழுவதும் குறிப்பாகத் தமிழக மக்களிடையே பெருமளவில் பரவியிருந்தது.

இரும்புக்கால மக்கள் புதிய கற்கால மக்களின் உடனடி வழித்தோன்றல்களாக இருப்பினும் அவர்களின் நாகரிகம் புதிய கற்கால நாகரிகத்தைவிடவும் பன்மடங்கு உயர்ந்ததாக விளங்கியது. அம்மக்கள் அத்தகைய உயர்ந்த நாகரிகத்தை எவ்வாறு எய்தினர் என்பது இன்னும் புரியாத புதிராகவே உள்ளது. அவர்கள் தங்கள் சமுதாயத்தை மிக நேர்த்தியான முறையில் கற்காலப் பழக்க வழக்கங்களிலிருந்து ஒரு உன்னதமான நாகரிக வாழ்க்கைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

இந்நாகரிகத்தின் தொடக்கம் பற்றிச் சில கருத்துவேறுபாடுகள் நிலவுகின்றன. யாதெனில், ஒரு சிலர் கூற்றுப்படி இந்நாகரிகம் மத்திய தரைக்கடல் பகுதியிலிருந்து தென்னிந்தியாவிற்குள் ஊடுருவியிருக்க வேண்டும் என்பதாகும். இவர்கள் அவ்வாறு நினைக்கக் காரணம் அங்கு காணப்படும் பெருங்கற்காலத்தைச் சேர்ந்த சவக்குழிகள் தென்னிந்தியச் சவக்குழிகளை ஒத்திருப்பதோடல்லாமல் அவை தென்னிந்தியச் சவக்குழிகளை விடத் தொன்மையான காலத்தைச் சார்ந்தவை என்பதாகும். பேராசிரியர் லால் கருத்துப்படி இந்நாகரிகம் எகிப்திலுள்ள நுபியாவிலிருந்து தமிழகத்திற்குள் ஊடுருவியிருக்க வேண்டும் என்பதாகும். ஆனால் கே. பாலகிருட்டிண நாயர், கருத்துப்படி கீழை நாடுகளின் (Near East) ஒரு சில மட்கல வகைகள் தமிழ்நாட்டு மட்கலங்களை ஒத்திருப்பதால், இந்நாகரிகம் அப்பகுதிகளிலிருந்து தமிழ்நாட்டுக்குப் பரவியிருக்க வேண்டும் என்பதாகும்.

அண்மைக் காலத்தில் இந்நூலாசிரியர் தமிழ்நாட்டின் பண்டைய மட்கல வகைகள் மற்றும் புதிய கற்காலம், இரும்புக்காலம் போன்றவற்றின் இயல்புகள் குறித்து மேற்கொண்ட ஆய்வின் பயனாகக் கீழ்க்கண்ட உண்மைகள் வெளிப்பட்டன.

(1) தமிழகத்தில் பலவகைப்பட்ட மக்கள் (Mixed Population) வாழ்ந்திருக்க வேண்டும். அவர்கள் இறந்தவர்களைப் புதைப்பதில் வெவ்வேறு வகையான முறைகளைக் கையாண்டிருக்க வேண்டும்.

(2) கோயம்புத்தூர் சவக்குழிகள் மற்றும் கொடைக்கானலுக்கு அருகிலுள்ள பழனி மலையில் உள்ள சவக்குழிகள் ஆகியவற்றினுள் கிடைத்த சிலத் தனித்தன்மை வாய்ந்த மட்கலங்களை ஆய்கையில் அயல் நாட்டவர்களும் குறிப்பாக ஈரான் நாட்டைச் சார்ந்தவர்களும் தமிழகத்தில் வாழ்ந்திருக்க வேண்டும் என்று கருத வாய்ப்புள்ளது.

(3) இருப்பினும் தமிழக இரும்புக்கால மக்கள் புதிய கற்கால மக்களின் வழித் தோன்றல்களேயாவர் என்பதில் கடுகளவும் ஐயமில்லை. ஏனெனில் அக்காலத்தைச் சார்ந்த மட்கலவகைகளான கிண்ணங்கள், தட்டுக்கள், சாம்பிராணி தூபம், கிண்டி, நாக்கு கிண்ணம், அகன்ற தட்டுக்கள், ஆகியவை இரும்புக் காலத்திலும் பயன்படுத்தப்பட்டன.

(4) இவர்களுள் பெரும்பான்மையானவர்கள், சிந்துவெளி நாகரிகத்தின் சில இயல்புகளையும், எழுத்தையும் பயன்படுத்தியிருக்கிறார்கள். (பின்னர் விளக்கப்பட்டுள்ளது)

மேற்கண்ட கருத்தின்படி இரும்புக் காலத்தைச் சார்ந்த தமிழக மக்கள் புதிய கற்கால மக்களின் வழித்தோன்றலேயாவர் என்பது புலனாகிறது. ஆகவே இரும்புக்கால நாகரிகமானது, தென்னிந்தியாவிலிருந்து தோன்றி பிறகு இந்தியாவின் பிற மாநிலங்களுக்குப் பரவியிருக்க வேண்டும். குறிப்பாகக் கொற்கையில் கையினால் செய்யப்பட்ட பெரிய கருப்பு-சிவப்பு வண்ணத்தட்டுகளும், அடிப்பகுதியில் குழல் பொருத்தப்பட்ட கிண்டி, மட்கலம் ஆகியவையும் கிடைத்துள்ளன. சிந்துவெளியிலும் அவை போன்ற மட்கலங்கள் கிடைத்துள்ளன. எனவே மேற்கண்ட மட்கலங்களின் காலம் கி.மு. 2000ஆம் ஆண்டுகளைச் சார்ந்ததென்று எடுத்துக் கொள்ளலாம். கோயமுத்தூர் நல்லம்பள்ளியில் கிடைத்த சவக்குழி மட்கல வகைகளும் இக்காலத்தையே சார்ந்தவை எனக் கொள்ளலாம். ஆகவே தென்னிந்தியாவின் இரும்புக் கால மக்கள் இரும்பைப் பயன்படுத்திய காலமும் ஏறக்குறைய கி.மு. 2000ஆம் ஆண்டாக இருந்திருக்க வாய்ப்புண்டு.

இரும்பைத் தென்னிந்திய மக்கள் பெருமளவில் பயன்படுத்தியதால் இரும்புத் தொழில் உயர்ந்த நிலையில் வளர்ச்சி

பெற்றிருந்தது. வட இந்தியர்களிடையே கி.மு. 1200ம் ஆண்டிலேயே இரும்பு வழக்கில் இருந்ததென்றாலும் ஒரு சில இடங்களில் மட்டும்தான் அவை பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. சாம்பல் வண்ண மட்பாண்டங்களைப் பயன்படுத்திய அம்மக்கள் இரும்பைப் பற்றி அறிந்திருக்கலாம். ஆனால் தமிழர்களைப் போல் இரும்புச் சுரங்கங்களைக் கண்டுபிடித்து அதன் பயனாக இரும்புத் தொழிற்சாலைகளை அமைத்துப் பல வகையான கருவிகளைப் படைத்துப் பயனடைந்திருக்க வாய்ப்பில்லை என்பதை அறிதியிட்டுக் கூற முடியும். தமிழகத்தில் குறிப்பாக ஆதிச்சநல்லூரில் கிடைத்த மட்கலயங்களும், குறி எழுத்துக்களும், குறியீடுகளும் கி.மு. 1500ஆம் ஆண்டிற்கும் முற்பட்ட காலத்தைக் காட்டுகின்றன என்பதை முன்னரே விளக்கியுள்ளோம்.

தவிர இரும்புக்காலப் பிற்பகுதியின் தொடர்ச்சி சங்க காலமாகும். கீழ்க் காவேரிச் சமவெளியில் அகழ்வாராய்ச்சிகளை மேற்கொண்ட முனைவர் டி.வி. மகாலிங்கம் அவர்கள் சங்ககால இலக்கியங்களில் விளக்கப்பட்டுள்ள சமுதாயம் ஒரு உயர்மட்ட சமுதாயமாகும் எனக் கூறியுள்ளார்.

தமிழக இரும்புக் காலத்திற்கும் (சங்க காலம்) சிந்துவெளிக் காலத்திற்கும் இடையே நிலவும் நீண்ட *கால இடைவெளியையும் தொலைதூர இடைவெளியையும்* நீக்கும் நோக்கத்துடன் மேற்கண்ட ஆய்வுகளை மேற்கொண்டு இந்நூலாசிரியர் விளக்கியுள்ளார்.

இந்த இடைவெளிகளைக் குறைப்பதன் மூலம் இரு பெரும் நாகரிகங்களும் தொன்மையும், ஒற்றுமையும் கொண்டு விளங்கியவை என்பது புலனாகிறது. தமிழகத் தொல்பழங்கால பண்பாட்டு இயல்புகளைப் பிரதிபலிக்கும் கண்ணாடிகளாக விளங்குபவை சிந்துவெளி முத்திரைகளும், எழுத்து வடிவங்களும் என்றால் அது மிகையாகா.

# 5. சிந்துவெளி நாகரிகமும் திராவிடர் நாகரிகமும்

### *அகழ்வாராய்ச்சி காட்டும் திராவிட நாடு (தமிழகம்)*

தென்னிந்தியாவில் கடந்த 50 ஆண்டுகளில் நடத்தப்பட்டுள்ள அகழ்வாராய்ச்சிகளின் வாயிலாகப் பல உண்மைகள் தெரியவந்துள்ளன. நர்மதை, கோதாவரி ஆறுகளின் தெற்கே உள்ள நிலப்பகுதிகளைக் கொண்ட நாடு தென்னிந்தியாவென நாம் எடுத்துக் கொள்ளலாம். ஏனெனில், இப்பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டுள்ள தொல்பொருள்கள் தமக்குள் பல ஒற்றுமைகளையும், குறிப்பிட்ட ஒரு சில பண்பாடுகளுக்குரிய சிறப்பியல்புகளையும் கொண்டுள்ளன. கோதாவரி ஆற்றின் வடக்கு நோக்கிச் செல்லச் செல்ல இப்பண்பாட்டுக் கூறுகள் மறையத் தொடங்குகின்றன. தென் பகுதிகளில் வாழும் மக்கள் பேசிய மொழிகளும் திராவிட மொழிகளேயாகும்.

தென்னகத்தில் ஏறக்குறைய முப்பதிற்கும் மேற்பட்ட ஊர்களில் அகழ்வாராய்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. கண்டெடுக்கப்பட்டுள்ள தொல்பொருள்கள், பழங் கற்காலம் முதல் விசயநகரப் பேரரசு காலம்வரை உள்ள கால வரம்பிற்குட்பட்டவையாகும். இந்தத் தொல்பொருள்களில் சிலவற்றினைச் சிந்துவெளிப் பண்பாட்டுச் சின்னங்களுடன் வைத்து ஒப்பிட்டுப் பார்க்கையில் பல ஒற்றுமைகள் புலப்படுகின்றன. இவற்றைக் கொண்டு சிந்துவெளி நாகரிகத்துடன் திராவிடர் நாகரிகத்தினை இணைத்துப்பார்க்க இயலுகின்றது. அம் மக்கள் திராவிடர்களே எனக் கணிக்கவும் அவை பயன்படுகின்றன. சிந்துவெளி நாகரிகம் திராவிடர் நாகரிகமே என்ற கோபன்கேகன் ஆய்வாளர்களின் கூற்றினை உறுதிப்படுத்தும் அளவுக்குத் தென்னகத்து அகழ்வாராய்ச்சிகளில் கண்டெடுக்கபட்டுள்ள தொல் பொருள்கள் உறுதுணையாக உள்ளனவென்றால் அது மிகையாகாது. இந்த அகழ்வாராய்ச்சிகள் தரும் சான்றுகளை நாம் விளக்கமாகக் காண்போம்.

***தமிழகத்தின் தொன்மை:***

உலகில் பழம்பெரும் பண்பாட்டுப் பெருமையும், வரலாற்றுச் சிறப்பும் கொண்ட பகுதிகளில் தமிழகமும் ஒன்றெனக் கூறுவதில் பெருமையடைகிறோம். எகிப்தியர், கிரேக்கர், சுமேரியர் நாகரிகத்தைப் போல் தமிழர் நாகரிகம் உலகப் புகழ் பெற்றதாகும். தமிழகத்தின் வரலாறு பழங் கற்காலத்தில் தொடங்குகின்றது. ஏறக்குறைய இரண்டு இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் ஆதிமனிதன் வாழ்க்கையைத் தொடங்கினான் என முன்பே கூறியுள்ளோம். வரலாற்றுப் புகழ்கொண்ட கற்காலத் தமிழக மக்களது பண்பாட்டுக் கூறுகள் வட இந்தியப் பகுதிகளுக்கும், ஏன், இந்திய எல்லைக்கு அப்பாலுள்ள ஆப்பிரிக்கா, தென்கிழக்கு ஆசியா போன்ற நாடுகளுக்கும் ஊடுருவிச் சென்றுள்ளன. எனவே கற்காலம் முதல் வரலாற்றுக் காலம் எனப்படும் சங்க காலம் வரையில் தமிழகம் பல்வேறு பண்பாடுகளுக்குரிய மக்கள் கூட்டங்களுடன் நெருங்கிய தொடர்புகொண்டு உறவாடியிருக்கிறது. இதனை அகழ்வாராய்ச்சிகள் உறுதிப்படுத்துகின்றன. இத்தகைய தொன்மையான பண்பாட்டு - வரலாற்றுச் சிறப்புடைய திராவிடர்கள் சிந்துவெளி நாகரிகத்திற்கு உரியவர்களெனக் கருதுவதற்குரிய விளக்கத்தினை ஈண்டுக் காண்போம். சிந்துவெளி மக்கள் திராவிடர்களே என்தற்குரிய சான்றுகளை முதலில் ஆய்வதற்கு மாறாக, அவர்கள் திராவிடர்கள் அல்லர் என்பதற்குக் கொடுக்கப்பட்டுள்ள கருத்துக்களை முதலில் ஆய்வதே சாலப் பொருந்தும். அக் கருத்துகளுக்கு மறுப்பளிக்கும் வகையில் விளக்கினால் அதுவே முதலில் கூறிய கருத்தினை ஒப்புக்கொள்ளுவதற்கு வகை செய்யும் என்பது உறுதி.

சிந்துவெளி நாகரிகம் திராவிடர்களுடையது அல்ல என்பதற்கு இரண்டு முக்கிய விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன. அவையாவன: (1) முத்திரைகளின் மேல் காணப்படும் எழுத்துக்கள் வட மொழியைக் கொண்டுள்ளன. வேதங்களில் காணப்படும் பண்பாட்டுச் சிறப்பியல்புகளுக்குத்தான் இம் முத்திரைகள் வாயிலாக உருவங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே, வேதங்களில் காணப்படும் குறிப்புகளுக்குத் தக்கவாறு அவ்வெழுத்துக்களைப் படித்து, அவற்றுடன் காணப்படும் உருவங்களை விளக்கியுள்ளார்கள். வேதகால ஆரியப் பண்பாட்டையே இம்முத்திரைகள் உணர்த்துகின்றன என்பதே அவர்களது

கருத்துமாகும். (2) சிந்துவெளிப்பண்பாட்டுச் சின்னங்கள் திராவிடர் நாடு எனக் கருதப்படும் தென்னகத்தில் இதுவரை கண்டெடுக்கப்படவில்லை என்பதாகும். முதலில் கூறப்பட்ட கருத்திற்கு மறுப்பளிக்கத் தேவையில்லை. ஏனெனில், அக்கருத்தினை எடுத்துக் கூறியவர்கள், தக்க சான்றுகளை, மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் விளக்கமாகத் தரவில்லை. மேலும், அவர்கள் தங்களது ஆய்வினைத் தொடர்ந்து பின்பற்றவுமில்லை. அவர்கள் விட்ட இடத்தில் தொடர்ந்து ஆய்வதற்கு அவர்களது வாதங்கள் பிறரைக் கவருவனவாக இல்லை என்பதே அதற்குக் காரணமாகும். மேலும் சிந்துவெளி நாகரிகம் ஒரு நகர்ப்புற நாகரிகமாகும் (Urban Civilisation). ஆனால் வேதகால ஆரியர் நாகரிகம், ஒரு கிராமிய நாகரிகம் (Rural Civilisation) என்பதை முன்னரே விளக்கியுள்ளோம். எனவே சிந்துவெளி நாகரிகத்தினை ஆரியர்கள் நாகரிகம் எனக் கருதத் தயக்கம் ஏற்படுகின்றது.

அடுத்து, மேலே கூறப்பட்டுள்ள இரண்டாவது கருத்தினைக் கொண்டுள்ள ஆய்வாளர்களுக்கு விடையளிக்கும் வகையில் தென்னகத்து அகழ்வாராய்ச்சிகள் பல புதிய தடயங்களைத் தந்துள்ளன. தென்னாட்டில் சிந்துவெளிப் பண்பாட்டுச் சின்னங்கள் காணப்படவில்லை என்பது, 1947ஆம் ஆண்டுக்கு முன்பு வேண்டுமானால் உண்மையாக இருந்திருக்கலாம். இந்தியா விடுதலையடைந்த பிறகு தென்னாட்டில் அறிவியல் முறைப்படி அகழ்வாராய்ச்சிகள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த அகழ்வாராய்ச்சிகள் வெளிப்படுத்திய உண்மைகள் பலவாகும். அவற்றுள் சில சிந்துவெளி நாகரிகத்தினைப் பற்றியனவாகும். அவற்றைப் பின் வருமாறு பிரித்து ஆராயலாம்.

வடமேற்கு இந்தியப் பகுதியில், *லோதல்* (*LOthal*), *அம்ரா* (*Amra*) போன்ற ஊர்களில் அகப்பட்டுள்ள அரப்பா பண்பாட்டுச் சின்னங்களுள், கருப்பு-சிவப்பு நிற மட்கலங்களும் காணப்படுகின்றன. இவ்வூர்களில், அரப்பா பண்பாட்டுடன் கலந்து காணப்படும் இந்த மட்கலங்களை, அப்பண்பாட்டின் இணைபிரியா ஒரு கூறு எனக் கொள்ளலாம். இத்தகைய மட்கலங்கள் தென்னகத்தில் கணக்கிட முடியாத எண்ணிக்கையில் அகப்பட்டுள்ளன. அவற்றைப் பயன்படுத்திய தென்னகத்து மக்கள் இரும்புக்கால மக்கள் ஆவர். லோதலில் குறைந்த அளவில் காணப்படும் இம் மட்கலய வகை,

தென்னிந்தியாவில் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு, இறுதியாக இரும்புக்காலத்தில், தமிழகம் முழுவதும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டன. எனவே, இவ்விரு பகுதிகளிலும் வாழ்ந்த மக்களிடையே கருத்துப் பரிமாற்றம் இருந்திருக்க வேண்டும். அதைக் காட்டிலும் இவ்விரு பகுதிகளிலும் வாழ்ந்த மக்கள் ஒரே இனத்தைச் சார்ந்தவர்களா? (திராவிடர்களா?) என்பதுதான் ஆராய்ச்சிக்குரியதாகும். லோதலில், அரப்பாப் பண்பாட்டின் காலம் கி.மு. 2000 எனக் கணிக்கப்பட்டுள்ளது. தென்னகத்தில், இந்தக் கருப்பு-சிவப்பு நிற மட்பாண்டவகையின் காலம் கி.மு. 300 என்று பிரம்மகிரியில் அகழ்வாராய்ச்சி நடத்திய சர் மார்டிமர் வீலரால் வரையறுக்கப்பட்டது. எனவே ஏறக்குறைய கி.மு. 2000த்தில் லோதலில் வாழ்ந்த அரப்பா மக்களுக்கும், தென்னகத்தில் கி.மு. 300இல் வாழ்ந்த தமிழக மக்களுக்கும் யாதொரு தொடர்பும் இருந்திருக்க வாய்ப்பில்லை என வாதிக்கப்பட்டது. அரப்பாப் பண்பாட்டிற்குப் பிற்பட்டது தென்னகத்து இரும்புக்காலப் பண்பாடு என்பதே இம்முடிவிற்குக் காரணமாகும். பத்து ஆண்டுகளுக்கு முன்பு வேண்டுமாயின் இக்கூற்று உண்மையென ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கலாம். அண்மையில் மைசூரில் அல்லூரில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சி மூலம் கருப்பு-சிவப்பு நிறப் பானை வகைகளின் காலம் கி.மு. 1000 எனத் தெரியவந்துள்ளது. மேலும், கொற்கையில் இவற்றின் காலம் கி.மு 785 எனவும் ஆதிச்சநல்லூரில் கி.மு. 1500 எனவும் தெரியவந்துள்ளது. இந்த மட்கலங்கள் மத்திய இந்திய மாநிலங்களிலுள்ள பல ஊர்களிலும் காணப்படுகின்றன. இந்தத் தடயங்களை வைத்து ஒப்பிட்டுக் காண்கையில், அக்காலத்தில் திராவிடர் பண்பாடு இந்தியாவின் பல பகுதிகளில் பரவியிருந்தது என்பது புலனாகிறது.

அரப்பா மட்கலய வடிவங்களுள் ஒரு சில தென்னகத்திலும் அகப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, ஆந்திர மாநிலத்தில் நிகழ்த்தப்பட்ட எல்லேச்சுரம் அகழ்வாராய்ச்சியில் ஒன்றின்மேல் ஒன்றாக இணைக்கப்பட்ட மூன்று பானைகளைக் கொண்ட பாத்திர வகைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவ்வகைப் பானை வடிவங்கள் அரப்பா மக்களாலும் பயன்படுத்தப்பட்டன. தமிழகத்தில் திருக்காம்புலியூர் அகழ்வாராய்ச்சியில் டிஷ்-ஆன்-ஸ்டான்டு (Dish-on-Stand), ரிங் ஸ்டான்டு (Ring Stand), இன்சென்ஸ் பர்னர் (Incense Burner) போன்ற மட்பாண்ட வடிவங்கள் கிடைத்துள்ளன. இவ்வடிவங்கள் அரப்பாப் பண்பாட்டின் தலைசிறந்த ஒரு கூறாகும்.

முன்னர்க் கூறியது போன்று, அரப்பா பானை ஓடுகள் மீது காணப்படும் சில குறிகள், தென்னகத்துப் பானை ஓடுகளின் மீதும் காணப்படுகின்றன. நூற்றுக்கு மேற்பட்ட இத்தகைய குறிகள் தமிழகத்தில் மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அரப்பா முத்திரைகளின் மீது காணப்படும் எழுத்துக்களில் சில, தமிழகத்தில் மட்கலக் குறிகளாகவும் குறி எழுத்துக்களாகவும் காட்சியளிக்கின்றன. இன்னும் சில, தமிழகப் பிராமி எழுத்துக்களை ஒத்திருக்கின்றன.

தமிழகத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ள மிகப் பழங்கால நாணயங்களின் மேல் (பஞ்ச் மார்க்கு - நாணங்கள்) பல்வேறு குறிகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் சில குறிகள் அரப்பா முத்திரைகளின் மேல் வரையப்பட்டுள்ள எழுத்துக்களை ஒத்துள்ளன.

அரப்பா, மொகஞ்சோதாரோ மக்கள் உறைக்கிணறுகளையும், நெல் உறைகளையும் அதிக அளவில் பயன்படுத்தி வந்தார்கள். இவை தமிழகத்திலும் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, காஞ்சிபுரத்தில் மட்டுமே நூற்றுக்கு மேற்பட்ட உறைக்கிணறுகள் மண்ணுள் புதைந்து கிடக்கின்றன.

ஆதிச்சநல்லூரில் அழகான வேலைப்பாடு கொண்ட வெண்கலப் பாத்திரங்கள், அணிகலன்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றின் காலம் கி.மு. 1500 என வரையறுக்கப்படலாம். இதுபோன்ற வேலைப்பாடு கொண்ட வெண்கலப் பொருள்கள் தென் இந்தியாவில் வேறு எங்கும் அகப்படவில்லை. ஆனால் அரப்பா, மொகஞ்சோதாரோ போன்ற ஊர்களில் வெண்கலப் பொருள்கள் அதிக எண்ணிக்கையில் அகப்பட்டுள்ளன.

தமிழகத்தில் புதிய கற்காலத்திலேயே இறந்தவர்களைப் புதைக்கத் தாழிகள் பயன்படுத்தப்பட்டன. அடுத்தபடியாக வந்த இரும்புக்கால மக்களும் தாழிகளைப் பயன்படுத்தினர். எனவே இறந்தவர்களைத் தாழியிலிட்டுப் புதைக்கும் வழக்கம் புதிய கற்காலம் முதல் வரலாற்றுக் காலம் வரை தென்னகத்தில் வாழ்ந்த மக்களால் கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கிறது என்பதை நாம் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். இரும்புக்கால மக்களைத் திராவிடர்கள் எனக் கொள்ளுகையில், இவர்களுக்கு முன்பாக

வாழ்ந்த புதிய கற்கால மக்களும் இவ்வினத்தைச் சார்ந்தவர்கள் எனக் கருதுவதற்கு இத்தாழிகள் கண்டெடுப்பு வகை செய்கின்றது.

கற்களால் மூடப்பட்ட பெருங்கற்காலச் சவக்குழிகளைச் (Megalithic Burial - Mega = Big : lith = stone) கற்கிடை என்று புறநானூறு குறிக்கின்றது. தாழியினுள் புதைக்கும் வழக்கத்தையும் அவ்விலக்கியம் சுட்டுகிறது. அதனை ஈண்டுக் காண்போம்:

கலம் செய் கோவே, கலம் செய் கோவே
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
சேண்விளங்கு சிறப்பிற் செம்பியர் மருகண்
கொடிநுடங்கு யானை நெடுமா வளவன்
தேவ ருலக மெய்தின னாதலின்
அன்னோற் கவிக்கங் கண்ணகன் றாழி
வனைதல் வேட்டனை யாயி னெனையது வம்
இருநிலத் திகிரியாய் பெருமலை
மண்ணா வனைத லொல்லுமோ நினக்கே
(புறநானூறு: 225:9-8)

கவிசெந் தாழிக் கவிபுறத் துஇருந்த
செவிசெஞ் சேவலும் பொகுவலும் வெருவர
வாய்வன் காக்கையும் கூகையும் கூடிப்
பேஎய் ஆயமொடு பெட்டாங்கு வழங்கும்
காடுமுன் னினனே கள்கா முருநன்
(புறநானூறு: 238).

கலம்செய் கோவே கலம்செய் கோவே
அச்சுடைச் சாகாட்டு ஆரம் பொருந்திய
சிறுவெண் பல்லி போலத் தன்னொடு
சுரம்பல வந்த எமக்கும் அருளி
வியன்மலர் அகன்பொழில் ஈமத் தாழி
அகலிதாக வனைமோ
நனந்தலை மூதூர்க் கலம்செய் கோவே
(புறநானூறு – 364 : 11-13)

முதுமரப் பொத்திற் கதுமென இயம்பும்
கூகைக் கோழி ஆனாத்
தாழிய பெருங்கா டெய்திய ஞான்றே
(புறநானூறு: 364:11-13)

சிந்துவெளி மக்களும் இவ்வழக்கத்தைக் கொண்டவராவர். எனவே, புதிய கற்காலம் முதல் தென்னகத்தில் வாழ்ந்த மக்கள் திராவிடர்களேயாவர்.

ஆதிச்சநல்லூரில் கண்டெடுக்கப்பட்ட மண்டை ஓடுகளை ஆய்ந்து பார்க்கையில் அவற்றிற்குரியவர்கள் திராவிடர்களே என்பது புலனாகிறது. சிந்துவெளி அகழ்வாராய்ச்சியில் மண்டை ஓடுகளும், எலும்புக் கூடுகளும் அதிக எண்ணிக்கையில் அகப்பட்டுள்ளன. இவற்றை ஆய்தல் மானிடவியல் வல்லுநர்களின் முக்கியப் பணியாகும்.

இறுதியில் ஒரு குறிப்பினை நாம் கருத்தில் கொள்ளல் வேண்டும். சிந்துவெளி நாகரிகத்தைக் காட்டிலும் தொன்மையான வரலாற்றுச் சிறப்புடையது திராவிடர் நாடாகிய தமிழகம். திருநெல்வேலி மாவட்டத்தில் சாயர்புரத்திலும் அதனைச் சுற்றிலுமுள்ள பல சிற்றூர்களிலும் இடைக்கற்காலக் கருவிகள் ஆயிரக்கணக்கில் காணப்படுகின்றன என்பதை முன்பே குறிப்பிட்டுள்ளோம். இவற்றில் சில மிக்க தொன்மையுடையனவாகும். இந்தியாவில், இத்தகைய தொன்மை வாய்ந்த இடைக் கற்காலக் கருவிகள் வேறெங்கும் காணப்படவில்லை. எனினும் இலங்கைத் தீவில் மட்டும் இத்தகைய கருவிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. எனவே தமிழகமும், ஈழமும் மிக்க தொன்மை வாய்ந்த பகுதிகளைக் கொண்ட நாடுகளெனப் புவி அமைப்பியல் வல்லுநர்கள் கருதுகிறார்கள். தமிழகமும், ஈழமும் அக்காலத்தில் தரை வழியாக இணைந்திருந்திருக்கலாம். இவை இரண்டுக்கும் இடையேயிருந்த நிலப் பகுதிகள் தற்போது கடலுக்கடியில் அமிழ்ந்து கிடக்க வாய்ப்புண்டு. இப்பகுதிகளில் கடலுக்கு அடியில் அகழ்ந்து பார்த்தால் அரப்பா நாகரிகச் சின்னங்கள் தட்டுப்படலாம். மத்தியதரைக் கடற்பகுதிகளுக்கடியில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் நல்ல பலனைக் கொடுத்துள்ளன என்பதை இங்கு மீண்டும் குறிப்பிட வேண்டியுள்ளது.

## *6. மக்களின் அன்றாட வாழ்க்கை முறை*

சிந்துவெளி மக்கள் பலதரப்பட்ட இனங்களைச் சார்ந்தவர்களாக இருந்திருக்க வேண்டும். அப்பகுதியில் கண்டெடுக்கப்பட்ட மண்டை ஒடுகளை ஆய்கையில் அம்மக்கள் இனங்களைக் கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம்.

1. திராவிடர்
2. நடுநிலக் கடலின மக்கள்
3. ஆஸ்திரேலியப் பழங்குடியினர்
4. மங்கோலிய இனத்தவர்
5. அல்பைனர்

போதிய சான்றுகள் இல்லாமையால் விரிவாகக் கூறமுடியவில்லை. கிடைத்த மண்டை ஒடுகளும் உடைந்தவையாக இருந்தமையால் எதையும் அறுதியிட்டுக் கூறமுடியவில்லை. இப்பகுதியில் வாழ்ந்த பூர்வீகக் குடிமக்கள் திராவிட இனத்தைச் சார்ந்தவர்கள் என்பதில் ஐயம் இல்லை. இந்தியாவிற்கு அப்பாலும் திராவிடர்கள் பரவலாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பது ஆய்வாளர்களின் கருத்து.

தரைவழியாகவும், கடல் வழியாகவும் பிற நாடுகளோடு தொடர்பு கொண்டிருந்தார்கள். அம்மக்கள் வணிக நகரங்களில் வாழ்ந்தமையால் செல்வ வளம் மிக்கவர்களாகத் திகழ்ந்திருக்கிறார்கள்.

***தொழில்:***

நாகரிக வாழ்க்கையை அனுபவித்து வந்த சிந்துவெளி மக்கள் அன்றாட வாழ்விற்கு எல்லாத் தேவைகளையும் பெற்றிருந்தார்கள். குறிப்பாக வேளாண்மைத் தொழிலில் பெரும்பாலானவர்கள் ஈடுபட்டிருந்தார்கள். சிந்து நதியும், பருவ மழையும் வேளாண்மைத் தொழில் வளம் பெறப் பெரிதும் உதவின.

நெல், கோதுமை, பருத்தி, பார்லி, பட்டாணி போன்ற ஏராளமான பயிர் வகைகள் பயிரிடப்பட்டன. குறிப்பாக நெல்லையும் மற்ற தானியங்களையும் சேமித்து வைக்கக் களஞ்சியங்களை அமைத்துக் கொண்டார்கள் என்பதை நாம் முன்னரே கண்டோம். முத்திரைகள் மீது எருது, காளை ஆகியன அதிக எண்ணிக்கையில் காணபடுவது அம்மக்கள் வேளாண்மைத் தொழிலைத் தழுவி வாழ்ந்தமையைக் காட்டுகிறது. அது போன்றே செடிகளும், கொடிகளும், மரங்களும் முத்திரைகள் மீது பொறிக்கப்பட்டுள்ள காட்சி வேளாண்மைத் தொழிலின் மாட்சியை உணர்த்துகிறது. அன்றும் இன்றும் இந்தியா ஒரு வேளாண்மை நாடாகவே திகழ்ந்து வருகிறது என்பதை உலகம் அறியும். இருப்பினும் விவசாயத்துடன் வணிகத்தையும் பெருக்கி வந்திருக்கிறார்கள் என்பது உண்மையே.

*நெசவுத் தொழில்:*

பருத்தி, பட்டு, கம்பளிமுடி ஆகியவை கொண்டு நெசவுத் தொழில் நடத்தினார்கள். மொகஞ்சோதாரோவில் நூல் நூற்கும் கதிர்கள் பல கிடைத்துள்ளன. அவை களிமண்ணாலும், சுடு மண்ணாலும், சங்கினாலும், பளிங்குக் கற்களாலும் செய்யபட்டவையாகும். பஞ்சுத் துணுக்குகளும் கிடைத்துள்ளன. தென் இந்தியாவில் இருந்து பஞ்சை வாங்கியிருக்க வேண்டும் என்றும் கூறலாம். மேலும் பருத்தி ஆடைகள் ஓவியங்களிலும், சிலைகளிலும் காட்டப்பட்டுள்ளன. எனவே பருத்தி ஆடைகளை அவர்கள் விரும்பி உடுத்தி வந்திருக்கிறார்கள்.

*மட்கலத் தொழில்:*

மட்கலத் தொழிலை. அம்மக்கள் பரவலாகப் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். அன்றாடத் தேவைக்கு ஏற்பப் பல வகை மட்கலங்களை உருவாக்கிப் பயன்படுத்தினார்கள். பல வகையான மட்கலங்கள், நீர்த் தொட்டிகள், அடுக்குப் பானைகள், கிண்ணங்கள், தட்டுகள், சாடிகள், தூபம் தாங்கிய கிண்ணம் (dish-on-stand) சாம்பிராணி தூபம் போன்றவை பயன்படுத்தப்பட்டன. மட்கலங்கள் மீது வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டன. அவற்றின் மீது எழுத்துக்களும், குறி எழுத்துக்களும், குறியீடுகளும் குறிக்கப்பட்டிருக்கின்றன. பானைகளைச் சுடுவதற்கு முன்பும், சுட்ட பின்பும் அவற்றைப் பொறித்திருக்கிறார்கள்.

பலவகை மட்கலத் தொழில் வகைகளை அங்குக் காண முடிகிறது. அவற்றுள் மங்கலான சிவப்பு, கருமை, கருப்பு-சிவப்பு

மட்கல வகைகள் குறிப்பிடத்தக்கவை. குறிப்பாகக் கருப்பு-சிவப்பு மட்கல வகை திராவிடர்களின் பண்பாட்டு இயல்புகளுள் ஒன்றாகும். திராவிட நாட்டில் குறிப்பாகத் தமிழ் நாட்டில் அத்தகைய மட்கல வகை பெருமளவில் கிடைத்துள்ளன. இன்றும் கிடைக்கின்றன. பானையைத் தலைகீழாகச் சுடும் முறையைக் கையாண்டு உருவாக்கியிருக்கிறார்கள். கரங்களாலும், சக்கரங்களாலும் மட்கலங்கள் உருவாக்கப்பட்டன. மட்கலத் தொழில் சிந்துவெளி மக்களின் அன்றாடத் தேவைகளை நிறைவு செய்து வந்தது என்று கூறலாம்.

***உலோகத் தொழில்:***

அம்மக்கள் தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்களை உருக்கிக் கலங்களையும், அணிகலன்களையும் செய்யும் முறையைக் கற்றிருந்தார்கள். உலோகங்களை உருக்குதல், பொருட்களை வேண்டிய வடிவில் அமைத்தல் போன்ற தொழில் நுட்பங்களை அறிந்து கையாண்டு இருக்கிறார்கள். அகழ்வாய்வுகளில் உலை போன்ற உலோகங்களை உருக்கும் கருவிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மேலும் தங்கமும், வெள்ளியும் அணிகலன்கள் செய்யப் பயன்படுத்தப்பட்டன. வெண்கலத்தால் படிமங்கள் செய்யப்பட்டன. அவை சிறந்த வேலைபாடுகளுடன் கவர்ச்சியும் உடையன. செப்பு உலோகத்தைக் கொண்டு பலவகையான போர்க் கருவிகளையும், பயிர்த் தொழில் கருவிகளையும் உருவாக்கி இருக்கிறார்கள். கலப்பட உலோகங்களையும் தயாரிக்கக் கற்றிருந்தார்கள் என்பதற்குச் சான்றுகள் கிடைத்துள்ளன. எடுத்துக்காட்டுகளாக வெண்கலம், வெள்ளியீயம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். கலப்படமற்ற தங்கத்தைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். சிந்துவெளி மக்கள் தங்கத்தைக் குறிப்பாகத் தென்னகத்திலுள்ள கோலார், நீலகிரி போன்ற பகுதிகளிலிருந்து பெற்றிருக்க வேண்டும் என்று மார்டிமர் வீலர் போன்றோர் கருதுகிறார்கள். வேட்டையாடும் கருவிகளை செம்பினால் செய்திருக்கிறார்கள். இருப்பினும் வெண்கலத்தைப் பேரளவில் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பது புலப்படுகிறது. எனவே சிந்துவெளிக் காலத்தை வெண்கலக் காலம் என்று கூட ஒரு காலகட்டத்தில் பெயரிட்டு அழைத்து வந்தார்கள்.

இரும்பையும், இரும்பின் பயனையும் அவர்கள் அறியவில்லை. அதன் காரணமாகப் போர்க் கருவிகளையும்,

தற்காப்புப் பொருள்களையும் அகழ்வாய்வுகளில் காணமுடியவில்லை. அயலார் படையெடுப்புக்களைப் பற்றி அச்சமின்றி வாழ்ந்து வந்தார்கள் என்று தெரிய வருகிறது. எனவே அவர்களுடைய வீழ்ச்சிக்கு, மறைவுக்கு அந்நியப் படையெடுப்புகள் காரணமாயிருக்க வாய்ப்பில்லை என்று கருதத் தோன்றுகிறது.

***அணிகலன்கள் செய்யும் தொழில்:***

சிந்துவெளி அகழ்வாய்வில் ஏராளமான அணிகலன்கள் கிடைத்துள்ளன. அவற்றைச் செய்யத் தங்கம், வெள்ளி, செம்பு, வெண்கலம், சங்கு, தந்தம் ஆகியவை பயன்படுத்தப்பட்டன. வளையல்கள், காப்புகள், காதணிகள், மோதிரங்கள், மணிகள் போன்றவை உலோகங்களாலும், சங்கு, தந்தம் போன்றவைகளாலும் செவ்வந்திக் கற்கள், இரவைக் கற்கள், நீல, சிவப்பு, மஞ்சள் நிறக் கற்கள், பளிங்குக் கல், படிமக் கல், ஆகியவற்றைக் கொண்டு செய்யப்பட்டுள்ளன. செல்வந்தர்களும், எளிய மக்களும் அணிவதற்கு ஏற்ப அணிகலன்கள் செய்யப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. சிந்துவெளியில் கிடைக்காத இரத்தினக் கற்கள், மாணிக்கம், கோமேதகம், வைரம் ஆகியவற்றை இந்தியாவின் தென் பகுதிகளிலிருந்தும், அயல் நாடுகளிலிருந்தும் வரவழைத்துக் கொண்டார்கள். சங்குகளை அறுத்து வளையல்கள் செய்யும் கலை பரவலாக நிலவியது.

***சிற்பக்கலை:***

கற்களைக் கொண்டு சிறிய, பெரிய சிலைகளைச் செய்வதில் கைதேர்ந்தவர்களாக அம்மக்கள் விளங்கினார்கள். சுண்ணாம்புக் கல்லில் செய்யப்பட்ட மார்பளவு உள்ள ஒரு ஆண் சிலை கிடைத்துள்ளது. (படம் 8). மாக்கல் முத்திரைகளின் மீது மனிதர்கள், தெய்வங்கள், மரங்கள், செடிகள், கொடிகள், தொட்டிகள் போன்றவை செதுக்கப்பட்டிருக்கும் பாணி, தனிப் பாணி ஆகும். அதனைச் சிந்துவெளிக் கலைப்பாணி என்று அழைக்கலாம். அன்றாடம் வீட்டிற்குப் பயன்படும் அம்மி, எந்திரம், உரல் போன்றவற்றை அங்கேயே கிடைக்கும் பாறைக் கற்களைக் கொண்டு செய்திருக்கிறார்கள். இருப்பினும் மாக்கல் முத்திரைகள் செய்வதற்குப் பெருமளவில் உதவியிருக்கிறது. கற்சிற்பிகள் வாழ்ந்த காலம் சிந்துவெளிக் காலமாகும். இந்தியச் சிற்பக்கலைக்கு வித்திட்டவர்கள் சிந்துவெளிச் சிற்பிகள் ஆவர். அடுத்து வந்த ஆரியர் அல்லது வேதகாலம் முதல் மௌரியர்

காலம் வரை (அசோகர் காலம்) சிற்பக்கலையின் சுவடு தெரியவில்லை. அசோகர் காலத்தில்தான் சிற்பக்கலை தலை தூக்கிற்று. கிரேக்க நாட்டுடன் அவர் கொண்டிருந்த தொடர்பு காரணமாகச் சிற்பக்கலை இந்தியாவில் புகுத்தப்பட்டதாக ஒரு கருத்து நிலவி வருகிறது. ஆனால் சிந்துவெளியில் கிடைத்த சிற்பங்கள் இக்கருத்தை ஒருக்கித்தள்ளத்தக்க சான்றுகளாக விளங்குகின்றன (படம் 9).

***வணிகம்:***

உள்நாட்டு, அயல்நாட்டு வணிகம் உன்னத நிலையை அடைந்திருந்தது. அணிகலன்கள் செய்யத் தங்கத்தைத் தமிழ்நாட்டிலிருந்து வரவழைத்துக் கொண்டார்கள். லோதலில் ஒரு துறைமுகம் கண்டெடுக்கப்பட்டது. எகிப்து, சுமேரியா, கிரேக்கம் ஆகிய நாடுகளுடன் வணிகத் தொடர்புகள் வைத்திருந்தார்கள். சிந்துவெளி மக்கள் கப்பல் கட்டுதல், பழுது பார்த்தல் போன்ற பணிகளில் திறமை பெற்றவர்களாவர். முத்திரைகள் மீது கப்பல்கள் வரையப்பட்டுள்ளன.

பண்டமாற்று முறையிலும், முத்திரைகளைப் பயன்படுத்தியும் அவர்கள் வணிகம் செய்திருக்கிறார்கள். நாணயங்களும் நாணயச் செலாவணியும் வழக்கில் இல்லை.

***சமுதாயம்:***

உயர்ந்த ஒரு நகர நாகரிகத்தில் அம்மக்கள் வாழ்ந்து வந்தார்கள். தூய்மையான காற்று, நீர், சுத்தமான சுற்றுப்புறச் சூழ்நிலை ஆகிய வசதிகளுடன் நல்வாழ்வு படைத்தவர்கள் சிந்துவெளி மக்கள். அவர்களுடைய நகர அமைப்பு, பாதாள சாக்கடைத் திட்டம், கழிவுநீர்க் கால்வாய்கள், குப்பைத் தொட்டிகள் ஆகியவை தனித்தன்மை வாய்ந்த உயரிய நாகரிகத்தைக் குறிப்பவையாகும்.

மக்கள் பருத்தி ஆடையை விரும்பி அணிந்தார்கள். பஞ்சு உற்பத்தியில் அரப்பா தலைசிறந்த நகரமாக விளங்கிற்று. மேலாடையில் அரசமர இலை வடிவில் ஒப்பனை செய்திருப்பதை ஒரு சிலை காட்டுகிறது. மகளிர் பல வகையான அணிகலன்களை அணிந்து ஒப்பனை செய்து கொண்டார்கள். தங்கம், வெள்ளி, ஆகிய விலை உயர்ந்த உலோகங்களால் உருவாக்கப்பட்ட

அணிகலன்களை அவர்கள் விரும்பினார்கள். விலை உயர்ந்த வண்ணக் கற்களால் செய்யப்பட்ட மணிகளை மாலையாகக் கோத்து அணிந்து கொண்டார்கள். சங்கு வளையல்களைப் பெரிதும் விரும்பினார்கள். விதவிதமான தாயத்துகளை அணிந்து கொண்டார்கள்.

ஆடல், பாடல், ஓவியம் ஆகிய கலைகளை விரும்பிக் கற்றார்கள். எடுத்துக்காட்டாக வெண்கலத்தாலான ஓர் ஆடல் மகளிர் உருவம் அகழ்வாய்வுகளில் கிடைத்துள்ளதைக் குறிப்பிடலாம் (படம் 10). ஆடல் கலையைத் தோற்றுவித்தவர்கள் அம்மக்களேயாவர் என்று கூறுவதில் தவறில்லை. பல்வேறு பொழுது போக்கு விளையாட்டுகளிலும் அவர்கள் நாட்டம் கொண்டிருந்தார்கள். போக்குவரத்திற்குச் சிந்து நதியில் படகுகளைச் செலுத்திப் பயனுற்றார்கள். மரச்சக்கரங்களாலான வண்டிகள் (படம் 11a). தேர்கள் போன்றவை போக்குவரத்திற்குப் பயன்பட்டன. முத்திரைகளின் மீதும், மட்கலக்குறியீடுகளிலும் படகுகளும், பாய்மரக்கப்பல்களும், தேர்ச் சக்கரங்களும் வரையப்பட்டுள்ளதை இங்கு குறிப்பிடுதல் சாலப் பொருந்தும்.

குழந்தைகளின் விளையாட்டுக் கருவிகளான செப்பு ஊதல், வண்டிச் சக்கரம், போன்றவை அகழ்வாய்வுகளில் கிடைத்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சிந்துவெளி மக்களுடைய வழிபாட்டு நெறிகளைப் பற்றிய சில குறிப்புகளை முத்திரைகள் மீது காணப்படும் உருவங்களும், சின்னங்களும் கொடுக்கின்றன. உலகில் தோன்றிய சமயங்கள் அனைத்திற்கும் முன்னோடியாக விளங்குவது இயற்கை வழிபாடு. தொல் பழங்குடியினர் இயற்கைச் சக்திகளையே வழிபட்டு வந்தார்கள். அன்றாட வாழ்க்கையின் தேவைகளுக்கு இயற்கைச் சக்திகளான நிலம், காற்று, வானம், நீர், ஆறு, கடல், தீ ஆகியவற்றின் ஒத்துழைப்பு தேவைப்பட்டது. எனவே அவற்றை வணங்கி வழிபட்டு வந்தார்கள். முத்திரைகளின் மீது ஞாயிறு, ஆறு, கடல், நீர், ஆகியவற்றைக் குறிக்கும் குறிகளைப் பொறித்து அவற்றை நினைவுகூர்ந்தார்கள். மட்கலங்கள் மீதும் அவற்றைக் குறிகளாகவும் குறி எழுத்துக்களாகவும் வரைந்து தங்கள் நன்றிக் கடனைச் செலுத்தி வந்தார்கள் போலும். குறிப்பாக, நிலத்தாயை (Mother Goddess) வழிபடும் வழக்கம் பரவலாக ஆழமாகச்

சமுதாயத்தில் வேரூன்றியிருந்திருக்கிறது. நிலத்தைத் தங்களுக்கு உணவு தரும் தாயாக நினைத்து வழிபட்டு வந்தார்கள். வேளாண்மைத் தொழிலின் வளர்ச்சிக்கு நில வளம் இன்றியமையாதது.

அகழ்வாய்வுகளில் சுடுமண் நிலத்தாய் உருவங்கள் கிடைத்துள்ளன (படம் 11d). நில வழிபாட்டையும், நிலத்தாய் வழிபாட்டையும் அவை உணர்த்துகின்றன. இவ்வழிபாடு சக்தி வழிபாட்டிற்கு முன்னோடியாகும்.

விலங்கு வழிபாடு, (படம் 11c) மரவழிபாடு ஆகியவற்றையும் அம்மக்கள் பின்பற்றி வந்திருக்கிறார்கள்.

முத்திரைகள் மீது காணப்படும் மூன்று முகங்களைக் கொண்ட உருவம், ஒரு மரத்தடியில் அமர்ந்திருக்கின்ற உருவம் ஆகியவற்றைச் சிவபெருமானாகிய ஆலமர் செல்வனைக் குறிப்பவை என்றும், சிவ வழிபாட்டினைக் குறிப்பவையாகும் என்றும் சில ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். எனினும் முன்னரே கூறியது போல், அவ்வுருவங்கள் சிந்து வெளியை ஆண்ட அரசர்களின் உருவங்களாக இருக்கலாம் என்று கூறுவதில் தவறில்லை.

சிந்துவெளியில் சிவ வழிபாட்டிற்கு மாறாக முருக வழிபாடு இருந்திருக்க வாய்ப்புள்ளது. ஏனெனில் சிந்துவெளி எழுத்துகளிலும், மட்கலக் குறி எழுத்துகளிலும் முருக வழிபாட்டைக் குறிக்கும் சொற்கள் அடங்கியுள்ளன (வரை படம் 13). அகழ்வாய்வுகளில் சூலம், சேவற்கொடி போன்றவை அகப்பட்டுள்ளன. குறிப்பாக ஆதிச்சநல்லூரில் அவை கிடைத்துள்ளன.

***எழுத்து வடிவங்கள்:***

சிந்துவெளி எழுத்துக்கள் வலமிருந்து இடப்புறமாக எழுதப்பட்டுள்ளன. அவை தொல்பழந்தமிழ் மொழியைக் கொண்டுள்ளன. தமிழகப் பண்டைய மட்கலன்களின் மீது குறிகளும், குழுக்குறிகளும், குறி எழுத்துக்களும் காணப்படுகின்றன. இவற்றுள் சிந்துவெளி எழுத்துக்களை ஒத்த குறி எழுத்துக்களும் உள்ளன. அவற்றைத் தமிழ் மொழியின் துணை கொண்டு படித்துப் பொருளறிய முடியும் (வரைபடம் 12,13). இக்குறியீடுகள் பற்றிய விரிவான செய்திகளை இறுதியில் காணலாம்.

# 7. பண்டைய இந்தியாவில் எழுத்துக் கலை

பண்டைய இந்தியாவில் எழுத்துமுறை சிந்துவெளிக் காலத்திலிருந்து தொடங்கியது என்று கூறலாம். ஆனால் சிந்துவெளி எழுத்துவடிவம் இன்றும் நமக்குப் புரியாத புதிராகவே உள்ளது என்பது அனைவரும் அறிந்த உண்மை.

வேதங்களில் எழுத்து முறையைப் பற்றிப் பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. *ரிக்வேதம், யஜுர் வேதம், அதர்வண வேதம், வாஜ்சனேய சம்கிதம்* ஆகியவற்றில் எழுத்துக்களைப் பற்றிய பல செய்திகள் காணப்படுகின்றன. அச்சரங்களைப்பற்றி (எழுத்துக்கள்) உபநிடதத்தில் கூறப்பட்டுள்ளது. அதே போன்று *ஆரண்யகாவிலும், பிரமாணங்களிலும்* கூட அவை பற்றி விளக்கப்பட்டுள்ளன.

கி.மு. 4 அல்லது 3 ஆம் நூற்றாண்டில் பாணினி எழுதிய *அஷ்டாத்தியாயி* என்ற நூலில் *லிபி* (எழுத்து), *லிபிகாரா* (எழுதுபவர்), *பாணிணி* (கிரேக்க எழுத்து), *சுவரிதா* (எழுத்து முறையில் உள்ள ஒரு குறி) போன்றவை குறிப்பிடப் பட்டுள்ளன. பாணினியின் காலத்தில் கால்நடைகளின் மீது 5 அல்லது 8 போன்ற எண்களையும், *சுவத்திகம்* போன்ற குறிகளையும் இடும் வழக்கம் இருந்து வந்தது. அதுமட்டுமன்றி, கி.மு. 4ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட *அர்த்தசாத்திரத்தில்* கூட எழுத்துமுறையைப் பற்றியும், அதில் பயன்படுத்தப்படும் சில குறிகளைப் பற்றியும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. ஒரு இடத்தில் மாணவர்கள் அரிச்சுவடி கற்பதைப் பற்றியும் அதை எழுதுவது பற்றியும் கூடக் கூறப்பட்டுள்ளது.

மேற்கூறிய வடமொழி இலக்கியங்கள் தவிர, *சமண* மற்றும் *புத்த* இலக்கியங்களில் கூடப் பலவகை எழுத்துக்கள் நம் பண்டைய இந்தியாவில் வழக்கில் இருந்தனவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நம் நாட்டில் ஏறக்குறைய 18 வகையான

எழுத்து வடிவங்கள் நிலவி வந்தன என்று ஒரு சில சமண நூல்கள் இயம்புகின்றன. *மகாவத்சு* (Mahavatsu) என்ற பௌத்த நூலில் பண்டைய இந்தியாவில் 18 வகையான எழுத்துக்கள் நிலவியதாகக் கூறப்பட்டுள்ளது. அடுத்து *லலிதவிசுதாரா* (Lalithavistara) என்ற மற்றொரு பௌத்த நூலில் 64 வகையான எழுத்து வடிவங்கள் பண்டைய இந்தியாவில் நிலவியதாகக் கூறப்பட்டுள்ளது. மேற்கூறிய நூல்கள் அனைத்தும் கி.மு. 4ஆம் நூற்றாண்டிலிருந்து கி.மு. 2ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

நம் முன்னோர்கள் எழுதுவதற்குப் பயன்படுத்திய மூலப் பொருள்கள் மரம், மூங்கில் இலை, மற்றும் பொன்தகடுகள் போன்றவையாகும். *சிந்ததி* (Chintati) என்ற சொல் - கல், மரம், மட்கலம் போன்ற உறுதியான பொருட்கள் மீது மட்டுமன்றி, *தலபத்திரம்* (Talapatra) அதாவது, பனையோலை போன்ற மென்மையான பொருட்கள் மீதும் எழுதப்பட்ட வடிவங்களைக் குறிக்கும்.

மேலும் ஒரு வகை மயிலின் இறகு *பிர்ச்பார்க் (birch bark), பூர்ச்ச பத்திரம் (bhurja patra)* ஆகியவை எழுதப் பயன்பட்டிருக்கின்றன. எனினும், *சிந்ததி* என்ற சொல் ஒரு பொருளின் மீது காணப்படும் எழுத்து வடிவத்தையே குறிக்கும். இந்த வழக்கம் செப்புக் காலத்திலும், இரும்புக் காலத்திலும் நம் முன்னோர்களிடம் நிலவியதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. எடுத்துக் காட்டுகளாகக் களிமண் முத்திரைகள், மட்கலயங்களின் மீது காணப்படும் எழுத்துக்கள், குறி எழுத்துக்கள் மற்றும் கற்பாறையின் மீது செதுக்கப்பட்ட எழுத்து வடிவங்கள் ஆகியவற்றைக் கூறலாம்.

மேற்கண்ட எடுத்துக்காட்டுகளின் மூலம் தொல் பழங்காலத்திலிருந்தே எழுதும் கலையை நம் முன்னோர்கள் அறிந்திருந்தனர் என்பதும், அக்கலை படிப்படியாக நன்கு வளர்ச்சியடைந்திருந்தது என்பதும் விளங்குகிறது.

எழுதும் கலையில் நம் முன்னோர்கள் தேர்ச்சி பெற்றிருந்தனர் என்பதற்கு, வேதகாலத்தைச் சார்ந்த பொருள்கள் எவையும் இன்றுவரை கிடைக்வில்லை. ஆனால், பிந்திய அரப்பா, செப்புக்காலம், மற்றும் இரும்புக்காலத்தைச் சார்ந்த மட்கலக்

குறியீடுகள் பல (தனிக்குறியீடுகள் மற்றும் குழுக்குறியீடுகள்) எழுத்துக் கலையின் தொன்மையை எடுத்துக்காட்டுபவையாக அமைந்துள்ளன. இருப்பினும் இவற்றைப் படித்துப் பொருள் அறிந்து இனம் பிரிப்பதென்பது நிலுவையில் உள்ளது. அசோகர் காலத்துப் பிராமி ஆவணங்கள் தான் கல்வெட்டுகளுள் மிகத் தொன்மையானவையாகும். அசோகர் காலத்திய பிராமி எழுத்துக்கள் அவர் காலத்திற்கு முன்பிருந்தே பல நூற்றாண்டுகளாக வளர்ச்சியடைந்து வந்திருக்க வேண்டும்.

**தென்னிந்திய எழுத்துக்களும் அவற்றின் தொன்மையும்:**

தென்னிந்தியர்கள் குறிப்பாகத் தமிழர்கள் அசோகர் காலத்திற்கு முன்பிருந்தே எழுத்துக் கலையில் தேர்ச்சி பெற்றிருந்தனர் என்பதற்குப் பல சான்றுகள் தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. பண்டைய தென்னிந்தியர்களின் வழக்கத்திலிருந்த எழுத்திற்குத் *திராவிட லிபி* - திராவிட எழுத்து என்று பெயர். வடநாட்டைச் சார்ந்த பல பிராகிருத மற்றும் வடமொழி நூல்களில், தென்னாடு திராவிட தேசம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வடமொழி நூலான *லலிதவிசுதாரத்தில்* தென்னக எழுத்தைக் குறிப்பிடும்பொழுது *திராவிடலிபி* என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் *பிராகிருத* மொழியில் இயற்றப்பட்ட சமண நூலான *பண்ணவான சூத்திரம் (Pannavana Sutra)* என்ற நூலில் இதே எழுத்து *தமிலி* (*Damili*) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. *லலிதவிஸ்தரத்தில்* குறிப்பிடப்பட்டுள்ள 18 வகை எழுத்து வகைகளில் திராவிடலிபியானது 17ஆவது எழுத்து வகையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கூறிய எழுத்து வகைகளுள் பிராமி முதன்மையிடம் வகிக்கிறது. இதிலிருந்து முற்காலத்தில் பிராமி எழுத்துவகை பெரும்பாலான மக்களால் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது என்பது தெரியவருகிறது. பிராமி எனப்படும் வார்த்தை *சவும்ய விக்யான சூத்திரம் (*Sowmya Vigyana Sutra*)* என்ற சமணநூலில் *பம்மி* என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூல் கி.மு. முதலாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட நூலாகும்.

*திராவிட* அல்லது *தமிலி* என்று பெயரிடப்பட்டுள்ளதைக் காணும் பொழுது அது பண்டைய திராவிட மொழிகளை எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. *தமிலி* என்ற சொல், தமிழையே குறிக்கும் என்று கருதப்படுகிறது. மற்ற திராவிட மொழிகளைவிட தமிழுக்கே

அந்தப் பெயர் மிகவும் பொருந்தும். ஏனெனில் தமிழ்தான் மற்ற திராவிட மொழிகளைவிட மிகத் தொன்மையான மொழியாகும்.

அண்மைக் காலமாக வல்லுநர்களிடையே பின்வரும் கருத்து நிலவுகிறது. *தமிலி* எழுத்தும், *பிராமி* எழுத்தும் ஒன்றே என்றும், தமிழ் எழுத்தைத் *தமிழ் பிராமி* எழுத்து என்றும் கூறுகின்றனர். இக்கருத்தை நாகசாமி, மகாதேவன், கிருஷ்ணன் மற்றும் சௌந்தரராஜன் போன்றோர் வலியுறுத்தியுள்ளார். இவர்களின் கூற்றுப்படி *தமிழ் பிராமி* எழுத்து என்பது பலவகை பிராமி எழுத்துக்களுள் ஒரு வகைதான் என்றும், இதையே பண்டையத் தமிழ் மொழியை எழுதுவதற்குப் பயன்படுத்தினர் என்றும் கருதப்படுகிறது. பண்டைத் தமிழ் நாட்டின் பல இடங்களில் இயற்கைப் பாறைக் குகைகளில் ஒரு சில சமணத் துறவிகள் வாழ்ந்து வந்தனர். அவர்கள் தாம் வாழ்ந்த குகைகளில் விட்டுச் சென்ற பிராமி கல்வெட்டுக்களை வல்லுநர்கள் படித்து ஆய்வு செய்த பொழுது மேற்கூறிய முடிவிற்கே அவர்கள் வந்திருக்க வேண்டும். இத்தகைய குகைக் கல்வெட்டுகளில் காணப்படுவதைத் தமிழ் பிராமி எழுத்துக்கள் என்று கூறலாம். ஏனெனில் அவ்வெழுத்துக்கள் தமிழ் மொழியில் காணப்படுகின்றன. ஆனால் அதை வைத்து எக்காரணத்தைக் கொண்டும் தமிழ் எழுத்தைத் தமிழ் பிராமி எழுத்து என்று கூறிவிட முடியாது. ஏனெனில் அதற்கு எந்தவிதமான அறிவியல் விளக்கமும் கொடுக்கப்படவில்லை. அதாவது பிராமி காலத்திற்கு முன்பு தமிழை எழுதுவதற்கு வேறு எந்த வகை எழுத்து பயன்படுத்தப பட்டது என்பது தெரியவில்லை. அதற்கான சான்றுகளும் நமக்குக் கிடைக்காத காரணத்தால் அந்த அறிஞர்கள் மேற்கூறிய முடிவுக்கு வந்திருக்க வேண்டும். அதுமட்டுமன்றி, புகலர் (Buhler) என்ற அறிஞர் ஆந்திர நாட்டில் கிருட்டிணா மாவட்டத்தில் உள்ள *பட்டிப்பொரோலு* (*Bhattiprolu*) என்ற இடத்தில் கிடைத்த ஆவணங்களில் (பிராமி) காணப்படும் எழுத்துக்கள் திராவிட எழுத்துக்களுள் ஒரு வகையைச் சார்ந்ததென்று கூறியுள்ளார். அவரின் கருத்து மேற்கூறிய அறிஞர்கள் கண்ட தமிழ்பிராமி ஆய்விற்கு ஊக்கமளித்திருக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் பிராமி எழுத்து தோன்றுவதற்கு முன்பு வேறு எழுத்துமுறை எதுவும் இருந்திருக்க முடியாது என்று நாம்

உறுதியாகக் கூறமுடியாது. ஏனெனில் அப்படிக் கூறுவதற்கு எவ்வகைச் சான்றுகளும் இல்லை.

முன்னர்க்கூறியவாறு தென்னிந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்தில் பல ஊர்களில் அகழ்ந்தெடுக்கப்பட்ட மட்கலக்குறியீடுகள் ஐயாயிரத்திற்கும் மேற்பட்டவையாகும். அவற்றுள் சில தனிக்குறியீடுகளாகவும், மற்றும் சில குழுக் குறியீடுகளாகவும் அமைந்துள்ளன. அக்குறியீடுகளைச் சரியாக ஆய்வு செய்து அவற்றின் பொருளை அறிய முனைந்தோமானால் தமிழகத்தில் பிராமி காலத்திற்கு முன் எழுத்துமுறை நிலவியதா? அப்படி இருப்பின் அது எப்படிப்பட்டது? என்பன போன்ற பல உண்மைகள் நமக்குத் தெரியவரும். பண்டைய தமிழ் நாட்டில் எழுத்துக்கலை தோன்றி வளர்ந்தவிதம் பற்றி ஆய்வு செய்ய இந்தக் குறியீடுகள் பெரிதும் பயன்படுகின்றன. 1962ஆம் ஆண்டு டீ.டீ.லால் அவர்கள், இந்திய மட்கலக் குறியீடுகளைப் பற்றி ஆய்வு செய்து தம் கட்டுரையை வெளியிட்ட பிறகு அக்குறியீடுகளின் முக்கியத்துவத்தை உணர முடிந்தது.

சங்க இலக்கியங்களில் எழுத்துக்கலையைப் பற்றிப் பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றிற்கு முற்பட்ட நூலாகிய தொல்காப்பியத்தில் ஒரு சில எழுத்துக்களை எழுதும் முறை பற்றிக் குறிப்பிடப் பட்டுள்ளது. மேலும் அக்காலத்தில் வழக்கில் இருந்த தமிழ் மொழியை எழுதும் பொழுது கையாள வேண்டிய இலக்கண விதிமுறைகள் பற்றியும் அந்நூல் குறிப்பிடுகிறது. இக்குறிப்புகள் கற்குகைகளில் காணப்படும் பிராமி எழுத்தில் செதுக்கப்பட்ட கல்வெட்டுக்களைப் படித்து அவற்றின் பொருள் அறிய வல்லுநர்களுக்கு மிகவும் பயன்பட்டன. தொல்காப்பியத்தின் மூலம் நாம் ஐயமின்றி அறிந்து கொள்ளும் உண்மை என்னவென்றால் சங்க காலத்தில் அதாவது, கி.மு. 10ஆம் நூற்றாண்டுக்கும், கி.பி. 2ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் தமிழகத்தில் ஒரு சீரிய முதிர்ச்சி பெற்ற எழுத்துக்கலை வழக்கில் இருந்தது என்பதேயாகும்.

திருக்குறளில் முதல் குறளே அகரமுதல எழுத்தெல்லாம் என்று தொடங்குகிறது. அதாவது அகரத்திலிருந்துதான் மற்ற எழுத்துக்கள் தொடங்குகின்றன என்று பொருள். மற்றொரு குறளில் எண்ணும், எழுத்தும் இரு கண்களுக்கு நிகர் என்று

குறிப்பிடப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத்தில் கூடக் 'கண்ணெழுத்து', (Kanneluthu) என்ற ஒரு வகை எழுத்து வழக்கில் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. சங்ககாலத்தில் சிறந்து விளங்கிய பூம்புகார் துறைமுகப் பட்டினத்தில் வந்து இறங்கிய அயல்நாட்டுப் பொருட்களின் மீது மேலே குறிப்பிட்ட கண்ணெழுத்து இலட்சினைத்தான் இடப்பட்டதாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது. இராகவ ஐயங்காரின் கூற்றுப்படி கண்ணெழுத்து என்பது ஒரு வகை ஓவிய எழுத்தாகும், அல்லது அதனை அரிச்சுவடி எழுத்து என்றும் கூறலாம். இடைக்காலத்தில் அரச அவையில் எழுதுவதற்கென்றே நியமிக்கப்பட்ட எழுத்தர்களைத் 'திருமுகமெழுதுவோர்' என்று கூறுவர். கண்ணெழுத்தர் என்ற சொல்லை இதனுடன் ஒப்பிடலாம்.

சீவக சிந்தாமணியில் 'கரந்தெழுத்து' என்ற ஒரு வகை எழுத்தைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஒரு வகை இரகசிய அல்லது சங்கேத மொழியாகக் கையாளப்பட்டிருக்க வேண்டும் என்று கூறலாம். ஆயினும் தொல்காப்பியத்திற்கு விளக்கஉரை எழுதிய நச்சினார்க்கினியர் கருத்துப்படி, *கரந்தெழுத்து* என்பது ஏற்கனவே எழுதி வைத்தவற்றை நகல் எடுப்பதையும், மடல் எழுதும் தருவாயில் ஒருவர் கூற எழுத்தறிவு பெற்ற மற்றொருவர் அதை அப்படியே எழுதி கொடுப்பதையும் குறிக்கும் என்றும் கருதலாம்.

'நிகண்டு திவாகரம்' என்ற நூலில் கூட பலதரப்பட்ட எழுத்து வகைகளைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அவை *பெயரெழுத்து, முடிவெழுத்து, வடிவெழுத்து, தன்மை எழுத்து* என்ற வரிசையில் குறிப்பிடப்பட்டுள்ளன. *பிங்கலந்தை* என்ற மற்றொரு நிகண்டு நூலில் கூட இந்நான்கு வகை எழுத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றினுள் *பெயரெழுத்து* என்பது பெயர்களைக் குறிப்பிடுவதற்குரியது என்றும், *முடிவெழுத்து* என்பது இறுதி எழுத்து (Final Writing) என்றும் எடுத்துக் கொள்ளலாம். இம்*முடிவெழுத்து* என்பது நன்கு முதிர்ச்சி பெற்ற ஒரு எழுத்துவகை எனக் கருதப்படுகிறது.

இடைக்காலத் தமிழ் இலக்கண நூல்கள் பலவற்றுள் கூடப் பல்வேறு எழுத்து வடிவங்களும் அவற்றின் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. *யாப்பிலக்கணம்* என்ற நூலின் பழைய விளக்க உரையில் நான்கு வகை எழுத்துக்கள்

குறிப்பிடப்பட்டுள்ளன. அவை *உருவெழுத்து, உணர்வெழுத்து, ஒலியெழுத்து, தன்மையெழுத்து* என்பனவாகும். அந்நூலின் ஆசிரியர் கருத்துப்படி *உருவெழுத்து* என்பது ஓவிய எழுத்தையும் ஒலியெழுத்து என்பது *'ஒலியெழுப்பும் குறியெழுத்து'* (Sound sign or syllabic symbol) என்பதையும், *தன்மையெழுத்து* என்பது அரிச்சுவடி என்பதையும் குறிக்கும் எனக் கருதலாம். மேற்கூறிய இந்நான்கு வகை எழுத்துக்களும், தமிழ் மொழி வளர்ச்சியின் நான்கு நிலைகளைக் குறிப்பனவாக அமைந்துள்ளன. இந்நூல் பிற்காலத்தைச் சார்ந்ததாய் இருப்பினும் அதாவது கி.பி. 11ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாயிருப்பினும், மேற்கூறிய எழுத்து வகைகள் நம் தொல்பழந் தமிழகத்தில் வழக்கில் இருந்தன என்பதை உறுதி செய்கின்றன. மேலும் இவை நான்கும் தொடக்கத்திலிருந்தே வழக்கில் இருந்திருக்க வேண்டும். ஏனெனில் இந்நான்கு வகை எழுத்துக்களையும், ஒவ்வொரு அறிஞனும் கற்றிருக்க வேண்டியது இன்றியமையாதது என்று இந்நூலாசிரியரே குறிப்பிடுகிறார்.

எழுத்து என்ற வார்த்தை பண்டைய தமிழகத்தில் எழுதும் எழுத்தை மட்டுமன்றி ஓவியத்தைக் குறிப்பிடுவதற்கும் பயன்படுத்தபட்டது. சங்க இலக்கியங்கள் பலவற்றுள் எழுத்து என்ற வார்த்தையே ஓவியத்தைக் குறிக்கும் வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. சங்ககால மக்கள் ஓவியம் தீட்டுவதையும் ஒருவகை எழுத்து என்று கருதினார்கள். இதற்குச் சிலப்பதிகாரமும் சான்று கூறுகிறது. மேலும் கீழ்வாளை, மகராசக்கடை போன்ற இடங்களிலுள்ள கற்பாறை ஓவியங்களைக் காணும் பொழுது பண்டைத் தமிழர்கள் ஓவியம் தீட்டுவதை ஒரு எழுத்துவகையாகவே கருதியிருக்கிறார்கள் என்று உணர முடிகிறது.

சங்ககாலத்திலிருந்து கி.பி. 11ஆம் நூற்றாண்டு வரையில் தமிழகத்தில் குறைந்த அளவு நான்கு வகை எழுத்துக்கள் வழக்கில் இருந்திருக்கின்றன.

**ஓவிய மற்றும் ஒலி எழுத்தாகக் கருதப்படும் மட்கலக் குறியீடுகள்:**

மேற்கூறிய கருத்துக்களினடிப்படையில் கருத்தில் கொண்டு, மட்கலக் குறியீடுகள் எந்த அளவிற்குத் தமிழ்நாட்டின் எழுத்துக்கலை வளர்ச்சியுடன் தொடர்பு கொண்டவை என்பதை ஈண்டுக் காண்போம்.

1. ***ஓவிய எழுத்து:***

ஓவிய எழுத்து என்பது ஒரு படம் அல்லது ஒரு பொருளைக் குறிக்கும் வண்ணம் அமைந்த ஒரு சித்திரம் எனக் கருதலாம். ஆதிகாலத்தில் வரையப்பட்ட இத்தகைய சித்திரங்களை ஓவிய எழுத்தென்பர். இவை ஆதி மனிதன் தன் கருத்துக்களை வெளிப்படுத்தும் நோக்கத்துடன் வரையப்பட்டவையாகும்.

2. ***கருத்தெழுத்து:***

இது ஓவிய எழுத்து வகையைச் சார்ந்த மற்றொரு எழுத்துவகையாகும். ஒரு குறிப்பிட்ட பொருளையோ அல்லது ஒரு கருத்தையோ வெளிப்படுத்தும் நோக்கில் வரையப்பட்டவையாகும்.

3. ***ஒலி எழுத்து (Logograph):***

இவ்வகை எழுத்தில் பொருளைக் குறிக்க வேண்டுமானால் அப்பொருளின் படத்தை அல்லது அதன் ஒரு பகுதியை மட்டும் வரைந்து வார்த்தைகளாக வெளிப்படுத்தினர். மட்கலக் குறியீடுகள் இவ்வகை ஒலி எழுத்துகளுள் அடங்கும்.

மேலே குறிப்பிட்ட மூன்று வகை எழுத்துகளைத் தொல் பழங்காலத்து எழுத்துக்கலை வளர்ச்சியின் மூன்று முக்கிய நிலைகளைக் குறிப்பனவாகக் கருதலாம். ஒரு சிறந்த எழுத்துக்கலை அல்லது வடிவம் தோன்றுவதற்கு முன்னோடியாக அவை அமைந்திருந்தன.

***ஓவிய எழுத்தின் பொருளை அறிந்து கொள்ளுதல்:***

ஆதிகால மக்கள் இயற்கையாகத் தம் எண்ணங்களை ஒருவரோடு ஒருவர் பகிர்ந்து கொள்ள 'ஓவிய எழுத்து'க்களைப் பயன்படுத்தினர். அவை உலகத்தின் பல்வேறு நாடுகளில் வாழ்ந்த மக்களிடையே வெவ்வேறு வகையில் வழக்கில் இருந்தன.

ஒரு குறிப்பிட்ட மக்கள் பயன்படுத்திய ஓவிய எழுத்தின் பொருளை அறிந்து கொள்ள வேண்டுமானால் அதற்கு முதலில் அம்மக்களின் பண்பாடு, வாழ்க்கை முறை, சுற்றுப்புறச் சூழல் போன்றவற்றை நன்கு அறிந்து கொள்ள வேண்டியது

இன்றியமையாததாகும். ஏனெனில் ஒரு குறிப்பிட்ட மக்கள் பயன்படுத்திய ஓவிய எழுத்திற்கு அதே நாட்டைச் சார்ந்த அல்லது வேற்று நாட்டைச் சார்ந்த மக்களிடையே வேறு பொருள்படும்படி அமைந்திருக்க வாய்ப்புண்டு. எனவே ஒரு ஓவிய எழுத்தைப் பார்த்து அதன் பொருளை எளிதாகத் தெரிந்துகொள்ள முடியும் என்றாலும், அதே பொருளைத்தான் அதனை உருவாக்கியவரும் உணர்த்தியிருக்க வேண்டும் என்று நம்மால் அறுதியிட்டுக் கூறமுடியாது. இக்கருத்தை நினைவில் கொண்டுதான், இந்நூலாசிரியர் பாறை ஓவியங்களின் துணையுடன் சில மட்கலக் குறியீடுகளையும், குறிஎழுத்துக்களையும் படித்துப் பொருளறிய விழைந்துள்ளார்.

பீராஸ் அறிஞரின் கருத்துப்படி ஓவிய எழுத்தை முதலில் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவையாவன: (1) இயற்கை ஓவிய எழுத்துக்கள் (2) வழக்கில் வளர்ந்துவந்த ஓவிய எழுத்துக்கள். இயற்கை ஓவிய எழுத்து என்பது ஒரு பொருளைக் குறிக்கும் பொருட்டு அப்பொருளின் உருவை அப்படியே வரைவதாகும். ஆயினும் வழக்கில் வளர்ந்த ஓவிய எழுத்தில், குறிக்கப்பட்ட பொருள் அப்படியே வரையப்பட்டிருக்காது. அதனைக் கூர்ந்து நோக்குவோமாயின் அப்பொருளை அடையாளங் கண்டு கொள்ளலாம்.

***எண்கள் (Numerals):***

மட்கல ஓடுகள் பலவற்றின் மீது எண்களைக் குறிக்கும் குறியீடுகள் காணப்படுகின்றன. அவை ஒன்றாகவோ, தனியாகவோ அல்லது மற்ற குறிகளுடன் இணைந்தோ காணப்படுகின்றன. பொதுவாகச் சிறு நேர்கோடுகள் சிறியதும், பெரியதுமான நீள, அகல வாக்கில் வரையப் பட்டுள்ளன. ஒரு சிறிய நேர்கோடு மட்டுமே காணப்பட்டால் அதை எண் ஒன்று எனக் கணக்கிடலாம். இக்கோடுகள் தனியாகவோ அல்லது ஒன்றுக்கும் மேற்பட்டு ஒன்பது வரை மேலும், கீழுமாகவோ வரையப்பட்டுள்ளன. 10 என்ற எண்ணை நேர்கோடுகளில் எழுதாமல் ஒரு சிறிய வட்டத்தை வரைந்து காண்பித்திருக்கிறார்கள். சிந்துவெளி எழுத்துக்களுள் காணப்படும் பெரும்பான்மையான எண்கள் தமிழக மட்கலக் குறியீடுகளில் காணப்படுகின்றன. ஆனால் சிறிய கரங்களைக் கொண்ட ஒரு நட்சத்திர வடிவில் காணப்படும் ஒரு எண்ணைத் தமிழகக் குறியீடுகளுள் காணமுடிகிறது. இந்த ஒரு குறியீட்டைச்

சிந்துவெளி எழுத்துக்களிடையே காண முடியாது. சிந்துவெளி எழுத்துக்களிலும் மற்ற அயல் நாட்டு எழுத்துக்களிலும் எண் 10ஐக் குறிக்க ஒரு அரைவட்டம் தன்னந்தனியாக வரையப்பட்டுள்ளது. ஆனால் அதே அரை வட்டத்தைக் குறியீடுகளிடையே காணும்பொழுது அதனை எண் 5 என்றுதான் கருத வேண்டும். ஏனெனில் ஒரு சிறிய முழுவட்டம் காணப்பட்டால் அதையே எண் 10 என்று கணக்கிடலாம். ஒரு பெரிய வட்டம் தனியாகக் காணப்பட்டால் அதனை எண் 100 என்று பொருள் காணலாம்.

## 8.பண்டைய தமிழக மட்கலக் குறியீடுகளும் சிந்துவெளி எழுத்துக்களைப் படித்தலும்

பானைக் குறியீடுகள் இரு வகைப்படும். அவையாவன: (1) ஒற்றைக்குறியீடு (2) குழுக்குறியீடு. ஒன்றுக்கும் மேற்பட்டு இரண்டாகவோ அல்லது அதற்கும் மேற்பட்ட எண்ணிக்கையிலோ காணப்படும் குறியீடுகள் குழுக் குறியீடுகள் எனப்படும். குழுக்குறியீடுகளை ஒரு வகை எழுத்து வடிவம் என்று எடுத்துக் கொள்ளலாம். இத்தகைய குறியீடுகள் இரண்டு முதல் ஏழு குறியீடுகளைக் கொண்டனவாய் அமைந்திருக்கின்றன. இவை சிந்துவெளிக் காலம் (கி.மு. 3000) முதல் செப்புக்காலம், இரும்புக்காலம் (கி.மு. 1500) ஆகியவை வரை உரிய மட்கலயங்கள்மீது காணப்படுகின்றன.

இவற்றின் அளவுகள் அதாவது நீள, அகலம் ஒரே மாதிரியாக அமைக்கப்படவில்லை. மேலும் இவை ஒன்றுடன் ஒன்று மிக நெருக்கமாக வரிசையாகப் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றின் அமைப்பைக் கூர்ந்து ஆய்கையில், அக்கால மக்கள் ஒரு வார்த்தை அல்லது ஒரு சிறுவரியை எழுத முற்பட்டதைப் போலத் தோற்றமளிக்கின்றன. இவற்றுள் காணப்படும் குறியீடுகள் சிந்துவெளி எழுத்துக்களாகவோ அல்லது பிராமி எழுத்துக்களாகவோ அமைக்கப்பட்டிருப்பதை உணரமுடிகிறது.

இக்குறியீடுகள் சில பல்வேறு கோணங்களில் மேலிருந்து கீழாகவும், கீழிருந்து மேலாகவும், தொங்கும் நிலைகளிலும் பொறிக்கப்பட்டுள்ளன. எனவே இக்குறியீடுகளை எழுதியவர்கள் இவற்றினிடையே காணப்படும் இடைவெளி தொடர்பாக ஒரு சீரான வழிமுறையைப் பின்பற்றவில்லை என்பது தெரியவருகிறது.

இக்குறியீடுகள் இந்தியாவில் காஷ்மீர் முதல் கன்னியாகுமரிவரை அகழ்வாய்வுகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. எல்லா ஊர்களிலும் இரண்டு குறிகளைக் கொண்டவைதான் அதிக எண்ணிக்கையில் அகப்பட்டுள்ளன. குறிப்பாகச் சிந்துவெளியில்

ஏறக்குறைய 64 பானையோடுகள்மீது இருகுறிகள் கொண்ட குழுக்குறியீடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றை முதலில் ஆய்வு செய்து பொருள் காணுவோமேயானால், பிறகு அதனைக் கொண்டு சிந்துவெளி முத்திரைகள் மீது காணப்படும் எழுத்துக்களைப் படித்துப் பொருளறிவது எளிதாகும்.

சிந்துவெளிக்குறியீடுகள் தென்னிந்திய இரும்புக்காலக் குறியீடுகளுடன் ஒத்திருக்கின்றன. மேலும் அவை அனைத்தும் இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்டு ஐந்து குறீயீடுகளைக் கொண்டதாய் உள்ளன. தமிழகத்தில் சானூர், உறையூர், கொடுமணல், வல்லம், திருக்காம்புலியூர், கரூர் ஆகிய ஊர்களில் நிகழ்த்தப்பட்ட அகழ்வாய்வுகளில் இக்குழுக்குறியீடுகள் அகப்பட்டுள்ளன.

### *குழுக்குறியீடுகளுக்கும் சிந்துவெளி எழுத்துக்களுக்கும் உள்ள ஒற்றுமை:*

ஏறக்குறைய 84 குழுக்குறியீடுகள் சிந்துவெளி எழுத்துக்களை ஒத்துள்ளன. அவற்றுள் 52 குறியீடுகள் தென்னிந்தியாவில் பல்வேறு ஊர்களில் கிடைத்தவை. இக்குழுக்குறியீடுகளைச் 'சிந்து வெளி எழுத்துகள்' எனக் கருதலாம். சிந்துவெளி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானையோடுகள் தென்னிந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டில் வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளன. ஏற்கனவே அரப்பா, லோதல், காலிபங்கன், தெய்மாபாத் போன்ற ஊர்களில் கிடைத்துள்ள சிந்து வெளி எழுத்துக்களடங்கிய பானையோடுகளுடன் இவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம்.

அறிஞர்களின் கூற்றுப்படி தென்திசை என்று எடுத்துக் கொண்டால் தெய்மாபாத் வரை மட்டும்தான் சிந்துவெளி எழுத்துவடிவம் வழக்கில் இருந்தது என்பதாகும். ஆனால் இந்நூலாசிரியரின் ஆய்வு மூலமாக ஒரு உண்மை வெளிப்பட்டுள்ளது. சிந்துவெளி நாகரிகமும், எழுத்துக்களும் தென்திசையில் காவிரிப்பள்ளத்தாக்கு வரை பரவி இருந்திருக்க வேண்டும் என்பதே அது. சிந்துவெளி நாகரிகம் தமிழகம் வரை பரவி இருக்க வாய்ப்பில்லை என்றே கருதப்பட்டு வந்தது. ஆனால் இக்கருத்தைத் தகர்த்தெறியும் வகையில் சான்றுகள் கிடைத்துள்ளன. அடுத்து, தொல்பழங்கால திராவிட மொழியைக்

கொண்டு பானையோடுகள் மீது காணப்படும் குழுக்குறியீடுகளைப் படித்துப் பொருள் கண்டுள்ளார் இந்நூலாசிரியர் என்பது வியக்கத் தக்கதாகும். அதுமட்டுமன்றி சிந்துவெளி நாகரிகத்திற்கும் திராவிட நாகரிகத்திற்கும் இடையே நிலவும் கால இடைவெளியையும் குறைத்துக் காட்டியுள்ளார். சிந்துவெளி எழுத்துக்களாக உருவெடுத்துள்ள குழுக்குறியீடுகள் திராவிட மொழியைக் கொண்டுள்ளதால், அவற்றை படித்து பொருள் காணமுடிகிறது. ஏனெனில் அவை திராவிட நாட்டில் அதாவது குறிப்பாகத் தமிழகத்தில் கிடைத்திருப்பதே காரணமாகும். இந்த எழுத்துக்களை ஆய்கையில் அவை திராவிட எழுத்துக்களாகத்தான் வழக்கில் இருந்திருக்க வேண்டும் என்பது புலனாகிறது. எனவே சிந்துவெளி எழுத்துக்களைபடிக்க முயலும் ஆய்வாளர்கள் அவற்றை திராவிட மொழியின் துணையுடன் படிக்க முயலலாம். இந்நாள்வரை திரு. இராவ் அவர்கள்தான் ஆதி திராவிட எழுத்தின் உதவி கொண்டு சிந்துவெளி எழுத்துக்களைப் படிக்க முயல்பவர்களை எதிர்த்து வந்தார். ஏனெனில், அவர் கருத்துப்படி அவ்வாறு விழைபவர்கள் சிந்துவெளி எழுத்தானது ஆதி திராவிட எழுத்திலிருந்து உருவாகியிருக்க வேண்டும் என்ற எண்ணத்துடனேயே ஆராய்வர் என்பதாகும். ஆனால் இந்நூலாசிரியர் தக்க சான்றுகளுடன் திரு. இராவ் அவர்களின் எதிர்ப்பை மறுத்திருக்கிறார். மேலும் அவர் கூற்றுப்படி திராவிட மொழியில் இருந்துதான் சிந்துவெளி எழுத்து வடிவம் தோன்றியிருக்கவேண்டும் என்ற கருத்தைப் பல அறிஞர்கள் வரவேற்பார்கள். அண்மைக்காலம் வரை சிலர் இக்கருத்தை எதிர்த்தும் ஆதரித்தும் வந்தனர். தென்னிந்திய குறியீடுகளை ஆராயும் பொழுதுதான் அது சிறந்த வகையில் ‘சிந்துவெளி எழுத்தைப் படிப்பதற்கு’ உதவியாய் இருக்கும் என்ற உண்மை புலனாகிறது. இந்த ஆராய்ச்சி சிந்துவெளி எழுத்துக்களை ஆராய்ந்து படிக்க விழையும் அறிஞர்களுக்குப் பேருதவியாய் இருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. மேலும் இதன்மூலம் சிந்துவெளி எழுத்துக்களைப்படிப்பதற்கு வகை செய்யப்படுமானால் பழங்கால எழுத்துவடிவங்களில் ஒன்றான சிந்து வெளி எழுத்துவடிவத்தைப் படித்து அதன்மூலம் பல பேருண்மைகளை நாம் அறிய வாய்ப்பிருக்கிறது. மொத்தமுள்ள 753 குழுக்குறியீடுகளுள் 519 குறியீடுகள் தென்னிந்திய இரும்புக்கால மக்களால் பயன்படுத்தப்பட்டவையாகும். இந்த குறியீடுகளைப் பொறிக்கும் வழக்கம் மெல்ல மெல்ல எழுத்தாக மாறி ஓவிய

அல்லது ஒலி எழுத்தாக மாறியிருக்க வேண்டும். செப்புக் காலத்தில் (கி.மு. 1800-1200) தோன்றிய இவ்வழக்கம் தென்னிந்தியாவில் இரும்புக் காலத்தில் (கி.மு. 1500-300) மிக விரைவாக வளர்ச்சியையும், முதிர்ச்சியையும் கண்டிருக்க வேண்டும். எனவே இக்குழுக் குறியீடுகள்தான் அக்கால மக்களிடையே வழக்கில் நிலவிய எழுத்துவடிவம் என நம்பலாம். குழுக்குறியீடுகளை மூன்று வகைகளாகப் பிரித்து ஆய்வு செய்தல் வேண்டும். அவையாவன (1) சிந்துவெளி எழுத்துக்கள் அல்லது சின்னங்கள் மட்டும் தன்னடக்கியவை (2) சிந்து வெளி எழுத்துக்கள், பிராமி எழுத்துக்கள், தனிக்குறியீடுகள் ஆகிய மூன்றும் இணைந்தவை (3) பொருளறிய முடியாத வெறும் குறியீடுகளை மட்டும் தன்னடக்கியவை.

இக்குறியீடுகளுள் காணப்படும் குறிகள் அல்லது எழுத்துக்கள் வலமிருந்து இடமாகப் பொறிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. சிந்துவெளி எழுத்துக்களும் வலமிருந்து இடமாகத்தான் பொறிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு எழுதும் முறை தென்னிந்தியக் குழுக்குறியீடுகளுக்கும், சிந்துவெளி எழுத்துக்களுக்குமிடையே உள்ள ஒற்றுமையை எடுத்துக் காட்டுகிறது.

குழுக்குறியீடுகளுள் காணப்படும் குறிகளை ஆதி திராவிட மொழியின் துணைகொண்டு படிக்க முடிகிறது. இவற்றைப்படிப்பதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்ச் சொற்கள் தொல் திராவிட மொழியைச் சார்ந்தவகையாக இருக்க வேண்டும் என நினைக்கத் தேவையில்லை. அவை சங்ககாலத்திராவிட மொழியையும், அதற்கு முற்பட்ட காலத்தைச் சார்ந்த மொழியையும் உள்ளடக்கிய ஒரு வகை தமிழ் மொழியாகக் கூட இருக்கலாம் எனக் கருதத் தோன்றுகிறது. அதுமட்டுமன்றி சங்ககால, இடைக்காலத்திய சொற்கள் மற்றும் எண்கள்கூட இவற்றைப்படிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன (வரைபடங்கள்).

மொத்தம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட தனிக்குறியீடுகளுள், ஏறக்குறைய 2195 குறியீடுகள் திராவிடர்கள் வாழ்ந்த பகுதிகளிலிருந்து கிடைத்தவையாகும். இவற்றுள் ஏறக்குறைய 1613 குறியீடுகள் தமிழ் நாட்டைச் சார்ந்தவை.

மேலும் 120 தனிக்குறியீடுகள் சிந்துவெளி எழுத்துக்களைப் போன்றே உள்ளன. இந்த ஒற்றுமை இவ்விரு பண்பாடுகளையும் இணைக்கும் பாலமாக உள்ளது என்றால் அது மிகையாகாது. அரப்பா மக்களின் பண்பாட்டுச் சின்னங்கள், எழுத்துக்கள் தென்னிந்தியத் திராவிடர்களின் மட்கலயங்கள் மீது எதிரொலிக்கின்றன என்று கருதலாம். சிந்துவெளிப்பண்பாட்டைத் தென்னிந்தியப் பானையோட்டுக்குறியீடுகள் வாயிலாகத் தெரிந்து கொள்ள முடிகிறது.

எடுத்துக்காட்டாக, சிந்துவெளி எழுத்துக்களுள் காணப்படும் மீன் உருவம், தென்னிந்தியக் குறியீடுகள் பலவற்றில் காணப்படுகிறது. அதனை 58 குறியீடுகளில் காணலாம். தமிழில் 'மீன்' என்ற சொல் மீனைக்குறிக்கும். சிந்துவெளிப் பகுதி 'மீனாடு', அதாவது மீன்கள் நிறைந்த நாடு என்று ஒரு காலத்தில் அழைக்கப்பட்டது. மேலும் மகாபாரதத்தை இயற்றிய வியாசர்கூட மீனவரின் மகன் என்று கூறுவார்கள். சங்க இலக்கியமான புறநானூறில், சேர மன்னன் பெருஞ்சேரலாதன் மகாபாரதப் போரில் போரிட்ட பாண்டவர், கௌரவர் ஆகிய இரு போர்ப்படைகளுக்கும் உணவளித்ததாகக் கூறப்பட்டுள்ளது. இதன்மூலம் சேரமன்னர்களுக்கும் மகாபாரதப் போருக்கும் இடையே ஏதோ ஒரு தொடர்பு இருந்திருக்க வேண்டும் என்பது புலனாகிறது. அதுமட்டுமன்றி மகாபாரதத்தை இயற்றியவர் ஒரு திராவிடர் என்ற கருத்தையும் வலியுறுத்துவதோடு, சிந்துவெளிப்பகுதி மீனாடு என்ற பெயரால் அழைக்கப்பட்டது என்ற கருத்தும் உறுதியாகிறது.

ஈராசு என்ற அறிஞரின் கருத்துப்படி சிந்துவெளி நாகரிகம் சிந்து சமவெளியில் மட்டும் பரவியில்லாமல் அது இந்தியா முழுவதிலும் பரவியிருந்திருக்க வேண்டும் என்பதாகும். ஏனெனில் அவ்வப்பொழுது இந்நாகரிகத்தின் நினைவுச் சின்னங்களை இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கண்டெடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம். எனவே இவ்வறிஞரின் கருத்து உண்மையாக்கப்படவுள்ளது.

இதற்கும் மேலாக ஹால் என்ற ஆய்வாளர் கூற்றுப்படி இந்தியப் பண்பாடு, ஆரியர்கள் வருகைக்கு முந்தைய காலத்திலிருந்தே தொடாங்கியிருக்க வேண்டும் என்றும், கிரேக்க நாட்டைப் போல் இங்கும் வெற்றி கொண்டவர்கள் தோற்கடிக்கப்பட்ட

மக்களின் பண்பாட்டைக் கற்றுக் கொண்டிருக்க வேண்டும் என்பதாகும். மேலும் சிந்துவெளி மக்களின் மொழியானது தென்னகத்தின் பழம்பெரும் மொழியான தமிழாகத்தான் இருந்திருக்க வேண்டும் என்று கூறலாம்.

மேற்கூறிய கருத்தை, சிலபில் என்ற அறிஞரின் கருத்து உறுதிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. தமிழ்தான் சிந்துவெளி மக்களின் மொழியாக இருந்திருக்க வேண்டும். எனவே தான் அது திராவிடர்களின் குறியீட்டு எழுத்துகளில் எதிரொலிக்கின்றன. அவர் கருத்துப்படி 'சுமார் நான்காயிரம் அல்லது மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பாரசீக வளைகுடா உள்ளிட்டு, வடகிழக்கு ஈரான் வரையில் ஒரு நாடு (பேரரசு) அமைந்திருக்க வேண்டும். அங்கு வாழ்ந்த மக்கள் கருப்பு-சிவப்பு நிற மட்கலங்களைப் பயன்படுத்தி வந்தார்கள்'. எனவே, தென்னிந்தியாவில் திராவிடர்களும் இரும்புக் காலத்தில் கருப்பு-சிவப்பு நிற மட்கலங்களை அதிக எண்ணிக்கையில் பயன்படுத்தி வந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நீண்டகாலத்திற்கு முன்பு ஈராசு அவர்களும் அண்மைக் காலத்தில் பர்போலா, மகாதேவன் போன்ற அறிஞர்களும் ஆதி திராவிட மொழியின் துணைகொண்டு சிந்து சமவெளி எழுத்துக்களைப் படிக்க முயன்று வருகின்றனர். மேற்கண்ட அறிஞர்களின் கருத்துக்களும் சான்றுகளும் இந்நூலாசிரியரின் கருத்தும் சிந்துவெளி மக்கள் திராவிடர்கள் தான் என்ற கருத்தை வலியுறுத்தப் பயன்படுகின்றன.

## *நிழற்படங்கள் பட்டியல்*

1 மொகஞ்சோதாரோ தெரு அமைப்பு

2 நீச்சல் குளம்

3 லோதல் - துறைமுகம்

4 கண்டியூர் - சிந்துவெளி எழுத்துக்கள் தாங்கிய புதிய கற்கால கைக்கோடரி

5 சிந்துவெளி முத்திரைகள்

6 புலிகடிமால் முத்திரை

7 எருமையோன் முத்திரை

8 மொகஞ்சோதாரோ - ஆண் உருவச்சிலை - ஓர் அரசர்

9 அரப்பா - உடைந்த கற்சிலைகள்

10 மொகஞ்சோதாரோ - ஆடல் நங்கை

11a சக்கரவண்டி

11b இன்று வழக்கில் உள்ள சக்கரவண்டி - பஞ்சாப்

11c சுடுமண் காளை உருவம்

11d சுடுமண் நிலத்தாய் உருவங்கள்

12,13. வரைபடங்கள் - மட்கலக் குறிஎழுத்துக்கள் படிக்கும் முறை

படங்கள் 1-3 - நன்றி - தேசிய அருங்காட்சியகம் - கராச்சி
படம் 4 - நன்றி - தமிழ்நாடு தொல்லியல் துறை
படங்கள் 5-11d - நன்றி - தேசிய அருங்காட்சியகம் - கராச்சி

## பிற் சேர்க்கை

## கார்பன் 14 தேதிகள்

| வ.எண் | இடம்: | தேதி |
|---|---|---|
| 1. | அரப்பாவிற்கு முன்பும் பின்பும்: | கி.மு. 4000 – 3500 |
| 2. | அரப்பா : | கி.மு. 2300 – 1750 |
| 3. | மொகஞ்சோதாரோ | |
| 4. | லோதல் : | கி.மு. 1750 – 1500 |
| 5. | காலிபங்கன் | |
| 6. | ஆதிச்சநல்லூர் : | கி.மு. 1570 |
| 7. | அப்புக்கல்லு : | கி.மு. 300 |
| 8. | கொற்கை : | கி.மு. 785 |
| 9. | காஞ்சிபுரம்: | கி.மு. 480 |
| 10. | புகார்: | கி.மு. (316 ± 103) |

## மேற்கோள் நூல்கள்


Aiyangar, S.K. — *Beginnings of south Indian History*

Arunachalam, A — *The Kalabhras in the Pandiya Country,* (1977)

Banerjee N.R. and Soundararajan K.V. — 'Sanur' – 1950-52, *Anciant India. No: 15*

Basham A.L. — 'Some reflections on Dravidians and Aryans' *B.I.T.C. Vol. 2, University of Madras, 1963*

Burrow T. and Emeneau, MB — *A Dravidian Etymological Dictionary,* Oxfort. 1961.

Burrow Thomas — 'Dravidian and Decipherment of the Indus script' *Journal of Tamil studies,* Vol. 2, No: 1, 1970.

Chakravorthy, B.B. — 'Intermediate stage between Indus and Brahmi script', *Folklore (India),* Vol. 20, No:2, 1979

Cornelius, J.T. — 'The Graffi on the Megalithic Pottery of South India and Dravidian Origin', *Tamil Culture,* Vol. 12, 1966.

David Diringer — *The Alphabet,* 1947, Writing, London, 1962

Dani, A.H. — *Indus Civilisation:* New Perspectives, Islamabad *(ed. 1981).*

Dikshit, K.N. — *Prehistoric Civilisation of the Indus Valley (1973)*

Foote, R.B. — *Indian Pre-Historic and Proto-historic Antiquities* – Notes on their Ages and Distribution, (1916).

Gurumurthy, S — 'Graffiti on the Ancient Indian Pottery and the Decipherment of the Indus Script' (1979)

Gurumurthy, S. — "Recent Archaeological Investigations and Tamil Culture" *Bulletin of the Institute of Traditional Culture,* Chennai, 1976 (B.I.T.C.)

Gurumurthy, S — Archaeology and Tamil Culture (Tamil) Madras University, 1972.

Heras, H (1953) — 'Studies in proto-Indo-Mediterranean Culture' *Indian Historical Institute,* Bombay.

Hunter, G.R. — *The Script of Harappa and Mohenjodaro and its connection with other scripts, London, 1934.*

Iravatham Mahadevan — "A study of Recent attempts to deciper the Indus Script" (1995-2000) – *Indian History` Congress,* Bhopal (2001).

Krishna Rao, M.V.N. — "Indus Script Deciphered, New Delhi, 1982,

Lal. B.B, — "From the Megalithic to the Harappa, Tracing back the graffiti on Pottery', *A.I. Vol. 16, (1960), 1962.*

Mackay, E.J.H. — "Further Excavations at Mohenjo Daro".


| | |
|---|---|
| Marshall, J | *Mohenjodaro and Indus Civilisation 3 Volumes, London.* |
| Mahalingam. T.V. | *Excavation in the Lower Kaveri Valley* |
| Nilakanta Sastri, K.A. | *The Culture and History of the Tamils (1964)* |
| Parpola, A, Koskenninemi, S.,Parpola, S., Pantti Aalto, (1969) | *Decipherment of the proto-Dravidian inscriptions of the Indus civilisation; a First announcement Copenhagen.* |
| Raghavaingar, M | *Velir Varalaru,* (1916), |
| Ramachandra Diksitar, V.R. | *Prehistoric South India* (1951) |
| Rao, S.R. | The Decipherment of the Indus Script, Mumbai, 1982 |
| Rao. S.R. | "Lothal, 1955-62" (*Memories of the Archaeological Survey of India*) No: 78, Vol. III. |
| Rea. A. | *Catalogue of Pre-Historic Antiquities from Adichchanallur and Perumbair.* |
| Rea Heras, H | *Studies in Proto-Indo-Mediterranean Culture,* Volume 1, Bombay, 1953. |
| Sali, S.A. | *Diamabad, (1976-79)* |
| Sarma. I.K. | *Religion in art and Historical Archaeology of South India (1987),* |
| Sridhar. T.S. (Ed) | *Indus Civilisation and Tamil Language .* |
| Sridhar. T.S. (Ed.) | *கல்வெட்டு (2006)* |

| | |
|---|---|
| Subramanyan, T.N. | *பண்டைத் தமிழ் எழுத்துக்கள், 1931* |
| ................ | *உலக மொழிகளுள் தமிழ்க் கூறுகள். (International Language Centre, Chennai) – 1995.* Tamil conference Souvenir. |
| ................ | *Origin of Humanity and Origin of Language* |
| ................ | *Bharathi Tamil Sangam, Calcutta.* |
| Vats . M.S. | *Exvcavations of Harappa,* 3 Vol., Calcutta 1940 |
| Wheeler. R.E.M. | *Arikamedu* "An Indo-Roman Trading Centre", *Ancient India, No: 2* |
| Wheeler, R.E.M. | *The Indus Valley Civilisation, 1960* |


## நிழற்படங்கள்



1. மொகஞ்சோதாரோ தெரு அமைப்பு



2 நீச்சல் குளம்







4. கண்டியூர் - சிந்துவெளி எழுத்துக்கள் தாங்கிய புதிய கற்காலக் கைக்கோடரி




5 சிந்துவெளி முத்திரைகள்




6 புலிகடிமால் முத்திரை




7 எருமையோன் முத்திரை



8. மொகஞ்சோதாரோ - ஆண் உருவச்சிலை - ஓர் அரசரர்





9 அரப்பா - உடைந்த கற்சிலைகள்





10 மொகஞ்சொதாரோ - ஆடல் நங்கை






11a சக்கரவண்டி 11b இன்று வழக்கில் உள்ள சக்கரவண்டி - பஞ்சாப்




11c சுடுமண் காளை உருவம்






11d சுடுமண் நிலத்தாய் உருவங்கள்




நண்டன் கோ

கோன் + நண்டன் = கோநந்தன்


KING'S NAME




ஊர் மீன் இரு

இரு + மீன் + ஊர் = இருமீனூர்


VILLAGE NAME




மூன்று மீன் ஓடு

ஓடு + மீன் + மூன்று = ஓடுமீன்மூன்று

3 STARS RUNNING



4

மண்டை மீன் ஐந்து

ஐந்து+மீன்+மண்டை=ஐந்துமீன்கலம்

ORBIT OF THE FIVE STARS




5

துதி மலை வேல்

வேல்+மலை+துதி = வேல்மலைதுதி

WORSHIP THE TRIDENT HILL




6

ஊர் ஏணி

ஏணி+ஊர் = ஏணியூர்

VILLAGE NAME



7

இருமலை

TWIN HIL

12, 13 வரைபடங்கள் - மட்கல குறிஎழுத்துக்கள் படிக்கும் முறை

12138

